Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை (15.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 166

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 3628

Fax:- 021 222 1811

அதிகரிக்கிறது ஆபத்து

## நிலத்தடி நீரில் கழிவு எண்ணை ஒருலட்சம் பேர் பாதிப்பு

### வலி.மேற்கிலும் எண்ணைக்கசிவு

அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தின் ஆய்வின் மூலம் தெல்லிப்பழை முதல் கோப்பாய் வரையான 30 கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ். மருத்துவ சங்கத்தலைவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

கிணறுகளில் எண்ணெய்க் கசிவு தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், மத்திய சுகாதாரத் திணைக்களம் யாழ். மருத்துவ சங்கம் ஆகியன இணைந்து கடந்த மாதம் தெல்லிப்பழையிலிருந்து கோப்பாய் வரையான சந்தேகத்துக்கிடமான 30 கிணறுகளில் நீர் மாதிரியை சேகரித்து அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தன.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளி.மேலதிக் அரச அதிபராக சத்தியசீலன் நியமனம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு புதிய மேலதிக அரசாங்க அதிபராக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ச.சத்தியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பூநகரி பிரதேச செயலராக கடமையாற்றும் இவர நாளை தனது கடமையைப் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை நிர்வாக சேவையில் 2001 ஆம் ஆண்டு இணைந்த இவர் தனது முதல் நியமனம் முதலே கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றி வருகிறார்.

கண்டாவளை பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.நகரில் நேற்று கவனஈர்ப்புபோர்

### இந்திய பிரதமருக்கு மகஜர்

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியப்பிரதமர் மோடி, இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டுமெனக் கோரி யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் காலை பொது மக்களின் அமைப்புகள் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தின.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இந்த கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் யாழ். இந்தியத்தூதரகத்தில் மோடியிடம் கொடுப்பதற்கான மகஜரைக் கையளித்தனர்.

யாழ்.இந்தியத் துணைத் தூரகத்தில் கையளிக்கப்பட்ட மகஜரில், போரின் போது சரணடைந்தவர்களை மீள ஒப்படைக்க

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய உதவிகள் தொடரும்

## யாழ்ப்பாணத்தில் மோடி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கான இந்திய அரசின் பல்வேறு உதவித் திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் இதற்கு அனைத்து மட்டங்களிலும் பெரும் வரவேற்பு இருப்பதாகவும் இந்தியப்பிரதமர் மோடி யாழ்ப்பாணத்தில் நேற்றுத்தெரிவித்தார்.**

19 ஆம் பக்கம் பார்க்க



## பிரதமர் ரணில் மீது நம்பிக்கையில்லாபிரேரணை

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் குழுவொன்று இவ்வாறு பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியினால் அண்மையில் விநியோகம் செய்யப்பட்ட 30 ஆண்டுகால பிணைப் பத்திரங்கள் தொடர்பில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மனம்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் சட்ட திருத்தவிவகாரம் நிறைவேற்று பேரவையில் குழப்பம்

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் தேசிய நிறைவேற்றுசபை உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு தோண்றியுள்ளது.

தேசிய நிறைவேற்று சபையின் கடந்த கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக யோசனை முன்வைக்கப்பட்ட போது எதிராகவும் ஆதரவாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதால், இறுதி தீர்மானத்திற்கு வர முடியாமல் போனதாக தெரியவருகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலக்சுமி சட்டநாதன் வெள்ளியன்று காலமானார்

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் க.சட்டநாதனின் பாரியார் திருமதி ஜெயலக்சுமி சட்டநாதன் கடந்த வெள்ளிக்கிழமையன்று காலமானார்

இவர் யாழ். வேலணை மத்திய மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

அன்னாரது பூதவுடல் யாழ். சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இறுதிக்கிரியைகள் இடம் பெறவுள்ளது.

## மோடியுடன் விக்கி பேச்சு



(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியுடன் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பேச்சு நடாத்தியுள்ளார்.

யாழ். பொது நூலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது வடபகுதி நிலைவரங்கள் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும்முழுமையான விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

யாழ். நூலக மண்டபத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் ரயில் சேவை ஆரம்பித்துவைத்தார் மோடி

இலங்கைக்கு இருநாள் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, 25 வருடங்களுக்குப் பின்னர் தலைமன்னாருக்கான ரயில் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். இந்திய அரசின் உதவியுடன் மதவாச்சியிலிருந்து தலைமன்னாருக்கான ரயில் பாதைப் புனரமைப்பு இடம் பெற்று இந்த சேவை நேற்று சனிக்கிழமை நண்பகல் 12:30 மணியளவில் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

காலை தலைமன்னார் வந்திருந்த இந்தியப் பிரதமருக்கு பிரமாண்டமான வரேவேற்பு வழங்கப்பட்டது. இதன் பின் வைபவரீதியாக கொடி அசைத்து அவர் ரயில் சேவையை ஆரம்பித்துவைத்தார். இந்த நிகழ்வின்போது வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மீனவர் பிரச்சினைகள், அரசியல் தீர்வு குறித்த விடயங்களை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் மோடிக்கு மனு ஒன்றும் கைய

19 ஆம் பக்கம் பார்க்க


### ஏப்ரல் இறுதியில் நாடாளுமன்றம் கலைப்பு ரணில் தகவல்

நாடாளுமன்றம் எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி கலைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஏனைய அரசியல் கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு ஜூன் மாதம் தேர்தல் நடத்தப்படும் எனவும் பிரதமர்

19 ஆம் பக்கம் பார்க்க

# சமாதான நீதவானாக இராசேந்திரன் சத்தியப்பிரமாணம்



(அச்சுவேலி)

அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் நடேசு இராசேந்திரன் யாழ். மேல் நீதிமன்றநீதிபதி திருமதி. கே. சிவபாதசுந்தரம் முன் நிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இராசேந்திரன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மருதானை சிரேஸ்ட தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். இராசேந்திரன் இலங்கைப்புகையிரதத் திணைக்களத்திலும் பின் இலங்கை மத்திய போகுவரத்துச் சபையில் கணக்காளராகவும பணியாற்றியவராவர்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக பல்தேசியக் கம்பனியொன்றில் சிரேஸ்டகணக்காளராக கடமையாற்றினார். யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினராகவும் பின் அதன் தலைவராகவும் சிறப்பாகக் கடமையாற்றினார். எண்பதுகளில் இலங்கை இராணுவக் கெடுபிடிகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் நம்பிக்கை ஏற்படுத்தவும்பத்தை மேனி

இடைக்காடு பிரசைகள் குழுவை அமைத்து இதன் தலைவராக சிறப்பாகக் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுமடு கிராமத்திற்கு மின்சாரம்



வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு கிராம மக்களின் பயன்பாட்டுக்கு மின்சார இணைப்பினை இராஜாங்க அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒலுமடு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் வை.பூபால சிங்கம் தலைமையில் நேற்று இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதற்கு 36 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் போது 350 குடும்பங்கள் பயன் பெறவுள்ளன.


## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக் கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |


# உழைக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் அவசியமானது

## ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் பசுபதி சீவரத்தினம் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

உழைக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கு சனசமூகநிலையங்களின் பயன்பாடு மிகவும் அவசியமானது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

வடமராட்சி, கரணவாய், செல்வாபுரம் இளங்கோ சன சமூக நிலைய இரண்டு மாடிக்கடடிடத் திறப்புவிழா நேற்று மாலை 5.00 மணியளவில் நிலையத்தின் தலைவர் திரு கு.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் அறிவியல் முன்னேற்றத்திற்கும் கல்வி அவசியமானது. இப்பகுதி மக்கள் வாசிப்புப் பழக்கத்தை பெற்றுக் கொள்ளவும் அதனூடாக நாளாந்த வாழ்வியலை அறிந்து கொள்ளவும் சனசமூக நிலையங்கள் களமாக அமைகின்றன. இச்சனசமூக நிலையம் பலருடைய பங்களிப்பில் அமையப் பெற்றுள்ளது.

1994ன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய அபிவிருத்தி போன்று எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்யவில்லை. டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சிகள் செயற்பாடுகளால் இவைகள் சாத்தியமாகியுள்ளன எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அருணாசலம் சந்திரசேகரம், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் இந்திரராசா துசிகரன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கரவெட்டி பொறுப்பாளர் இராசதுரை செந்தில்நாதன், கரணவாய் கிராமசேவையாளர் பா.வைகுந்தன், கரணவாய் தெற்கு திருமதி ல.தனுசா, கரவெட்டி சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு கொ.குணசிங்கம், கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத் தலைவர் திரு சி.ஜீ.திருமாஅழகன், பிரபல வர்த்தகர் திரு ஐ.விக்னேஸ்வரன் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# மகளிர்தின விழா

(யாழ்ப்பாணம்)


யாழ்.கொட்டடி சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்தும் சர்வதேச மகளிர் தினவிழா இன்று மாலை 4 மணிக்கு சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள நிலையக் கட்டடத்தில் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ்.பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி யோகநாதன் சங்கீதாவும், சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இயூட்திருமதி ஜெகோபிகா சாலினி (J/83) கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் மகளிர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

(105)

# முல்லைத்தீவில் வள்ளங்கள் எரிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீராவிப்பிட்டி மேற்கு மற்றும் ஹிஜ்ராபுரம் ஆகிய இரு மீனவ கூட்டுறவு சங்கத்துக்கும் சொந்தமான இரண்டு வள்ளங்கள், நேற்று முன்தினம் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளதாக, முள்ளியவளைப்பொலிஸ் நிலையத்தில் இரு சங்கங்களின் தலைவர்களும் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு நந்திக்கடலில், சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன் மற்றும் இறால் பிடிக்கும் மீனவர்களை பிடிப்பதற்கு, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு, குறித்த சங்கத்தினர் உதவி புரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் மீனவ சங்கத்தினர் இணைந்து நந்திக்கடல் பகுதியில் ஒரு தொகை சட்டவிரோத வலைகளை கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு சட்டவிரோத வலைகளைப் பறிமுதல் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மீனவ சங்கங்களுக்கும் சொந்தமான இரு வள்ளங்களும் மூன்றாம் கட்ட வடக்குவெளி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.


அதனை முதலப்பிட்டி பகுதிக்கு எடுத்துச் சென்று இனந்தெரியாத நபர்கள் தீவைத்துக் தீ மூட்டியுள்ளதாக, நீராவிப்பிட்டி மேற்கு மீனவ சங்கத்தலைவர் அப்துல் ஹமீட் அன்சார் மற்றும் ஹிஜ் ராபுரம் மீனவ சங்கத்தலைவர் முத்து முஹம்மது லாபிர் ஆகியோர் தெரிவித்தனர். நந்திக்கடலில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்களை பிடிப்பதற்கு கடற்றொழில் திணைக்களத்துக்கு உதவியமையினாலேயே, தங்களது வள்ளங்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த 2 வள்ளங்களும் 2013ஆம் ஆண்டு இரு சங்கங்களுக்கும் அரசினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் இரு வள்ளகளின் பெறுமதி அப்போது 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடையவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் கடந்த மாதங்களாக தடை செய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்பட்டு மீன் மற்றும் இறால் பிடிக்கப்பட்டு வருவதாக வீச்சு மீன்பிடித் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர். அதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தினர் பொலிஸாரின் உதவியுடன் தடைசெய்யப்பட்ட வலைகளை பறிமுதல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




3 — இலங்கைக்குள் இணக்கம் / இந்தியாவின் அனுசரணை / சர்வதேசத்தின் அழுத்தம் — 13



# தமிழர் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவது எப்படி?

கருணாகரன்

தமிழர்களின் அரசியல் தொடர்ந்தும் தேக்க நிலையிலேயே உள்ளது. கூர்மையாக அவதானித்தால் அது வீழ்ச்சியடைந்து கொண்டேயிருக்கிறது என்பது புலனாகும். இப்பொழுது கூட இந்த அரசியலில் ஏதாவது மாற்றம் நிகழும் என்று சொல்வதற்கில்லை.

அரசியல்வாதிகளிடமும் இதற்கான பதில் இல்லை. ஊடகவியலாளர்களிடமும் எந்தப் புதிய சரக்கும் கிடையாது. ஆய்வாளர்களும் எதையும் சரியாகச் சொல்ல முடியாமல், எதையும் முறையாகத் தீர்மானிக்க முடியாமல்தானிருக்கிறார்கள். தலைவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

பொதுவாக, இதற்கான உத்தரவாதத்தைச் சொல்ல முடியாத நிலையிலேயே எல்லோரும் உள்ளனர். ஆனால், ஒவ்வொருவரும் தத்தம் நிலைப்பாடுகளைப் பற்றி அதீதமான நம்பிக்கையோடிருக்கிறார்கள். அதாவது தாங்கள் பிடித்து வைத்திருக்கும் முயல்களுக்கு மூன்று கால்கள் தான் என்று பிடிவாதமாகவே இருக்கிறார்கள். இதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

இப்படியான ஒரு நிலையில்தான் தமிழர்கள் தங்கள் அரசியலை வழிநடாத்திக் கொண்டிருக்கின்றனர். அன்றாடம் காய்ச்சிகளின் வாழ்க்கையைப் போல, எது கிடைக்கிறதோ அதைவைத்து அன்றைய பொழுதைப்போக்கிக் கொள்கிறார்கள்.

கமரூன் வருகிறாரா? அதை வைத்து சில வாரங்கள். ஐ.நா. நவநீதம்பிள்ளை வருகிறாரா? அதை வைத்துச் சில மாதங்கள். அமெரிக்கத் தூதரா, அவரை வைத்து சில நாட்கள். ஐ.நா. அறிக்கையா? அதை வைத்துச் சில பொழுதுகள். ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளா? அவர்களை வைத்து சில காலம். இந்தியப்பிரதமர் மோடியா? நல்லது. நான்கு மாதங்களாவது ஓட்டி விடலாம்.

இப்படித்தான் தமிழ் அரசியற் கட்சிகளில் பலவும், தமிழ் ஊடகங்களில் பெரும்பாலானவையும் உள்ளன.

இப்படியான ஒரு நிலையில் இருந்து கொண்டு எதிர்காலத்தைப் பற்றியும் மாற்றங்களைப் பற்றியும் தீர்வுகளைப் பற்றியும் எப்படிச் சிந்திக்க முடியும்?

சிலர் சொல்கிறார்கள், 'ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு. ஒன்றுபட்ட இலங்கையர்களாக இருக்கும்போதே தீர்வுக்கான சாத்தியங்கள் உண்டு. இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டைக் காண்பது இதற்கு அவசியம். என்னதானிருந்தாலும் இலங்கை அரசுடன் ஒரு சுமுகமான பேச்சுக்கும் இணக்கத்துக்கும் செல்வதே மிகப் பொருத்தமானது. இதையே வெளியுலகமும் சொல்லி வருகிறது. இலங்கை அரசாங்கத்தைப் புறக்கணிக்கும்போது ஏனைய சமூகங்களில் இருந்து தமிழர்கள் தனிமைப் படுகிறார்கள். அத்துடன் அரசின் புறக்கணிப்புக்கும் ஆளாகிறார்கள். இது தமிழ்மக்களின் வளர்ச்சியைத் தடுத்துப் பின்தள்ளுகிறது. ஆகவே அரசாங்கத்துடன் பேசியே ஆகவேண்டும். அப்படிப் பேசும்பொழுது வெளிச்சக்திகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் சிங்கள, முஸ்லிம் சமூகங்களுடனும் சமநேரத்தில் உரையாடல்களை நடாத்த வேண்டும். ஜனநாயக அடிப்படையில் நல்லெண்ணத்தை உருவாக்குவதும் பகை மறப்பை மேற்கொள்வதும் மட்டுமே தீர்வுக்கான சாத்தியமாகும். இதுவே சர்வதேச அனுபவமுமாக இருக்கிறது என்று.

இதை மறுத்துரைக்கிறது இன்னொரு தரப்பு.

அவர்கள் சொல்கிறார்கள், 'இந்தியாவின் அனுசரணையோடுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியம்' என்று. மேலும் இதற்காக அவர்கள் தமிழ்நாட்டின் ஆதரவையும் அனுசரணையையும் ஆதாரம் காட்டுகிறார்கள். 'பிராந்திய சக்தியாகிய இந்தியாவுக்கு எப்பொழுதும் இலங்கைத்தீவின் மீதான செல்வாக்கு அவசியம். எனவே இதற்காகத் தமிழர்களை அரவணைக்க வேண்டிய தேவை இந்தியாவுக்குண்டு. தமிழ்நாட்டின் ஆதரவை இழந்து கொண்டு டில்லியில் ஆட்சியை நடாத்த முடியாது. தமிழ்நாட்டின் ஆதரவு ஈழத்தமிழர்களுக்கு உள்ளதால் எப்படியும் டில்லி அதற்குப் பணிந்துதான். ஆக வேண்டும். இதனால்தான் இந்தியப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யும் போதெல்லாம் இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றிப் பேசுகிறார்கள். இங்கே – இலங்கையில் உள்ள தலைவர்களைச் சந்திக்கும்போதும் இதையே வலியுறுத்துகிறார்கள். அதைப்போல இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கைத் தலைவர்களிடமும் இலங்கைப் பிரதிநிதிகளிடமும் இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றிப் பேசத் தவறுவதில்லை. எனவே, இந்தியாவைப் புறந்தள்ளி விட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றிச் சிந்திக்க முடியாது என்றெல்லாம் இதற்கான ஆதாரங்களை வைக்கிறார்கள்.

இன்னொரு தரப்போ, இதை முற்றாகவே மறுக்கிறது. இந்தியாதான் ஈழத்தமிழர்களுடைய போராட்டத்தையே நசுக்கியது. எப்பொழுதும் தன்னுடைய பிராந்திய நலனை முதன்மைப்படுத்தியே இந்தியா சிந்திக்கிறது. ஆகவே தன்னுடைய முகவர்களாகவே தமிழர்களைப் பயன்படுத்த விழைகிறதே ஒழிய தமிழர்களுடைய பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத்தருவதற்கு இந்தியா ஒரு போதுமே முயற்சிக்காது. இலங்கையில் இனப்பிரச்சினை தீருவதை இந்தியா விரும்பவேயில்லை. இனமுரண்பாட்டை வைத்தே இலங்கையின் மீது தன்னுடைய செல்வாக்கையும் தலையீட்டையும் நடாத்திக் கொண்டிருக்கிறது இந்தியா. எதிர்காலத்திலும் அது அப்படித்தான் செய்யும். ஆகவே இந்தியாவுக்கு வெளியே உள்ள சக்திகளின் ஆதரவையும் உதவியையுமே நாம் நாட வேண்டும். ஆகவேதான் நாம் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் உதவியையும் எதிர்பார்க்கிறோம். அந்தச் சர்வதேச சமூகத்தைக் கவரக்கூடிய அரசியற் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதுவே தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி என்கிறார்கள் இவர்கள்.

இப்படி, மூன்று பிரதான வழிமுறைகளை முன்மொழிவோரே அதிகமாக அரங்கில் காணப்படுகிறார்கள். இவர்களைவிட வேறு வகையான எண்ணங்களோடிருப்போரும் உண்டு. ஆனால், அவர்கள் எந்த வழிமுறைகளையும் துலக்கமாகக் காட்டவில்லை.

சரி, இந்த மூன்று வகைப்பட்டோரும் இப்படிச் சொல்லிக்கொண்டே அரசியலைச் செய்து வருகிறார்களே. ஆனால், எந்த முன்னேற்றமும் காணப்படவில்லையே. தமிழர் அரசியல் பிரச்சினை அப்படியே எந்த வகையான முன்னேற்றமும் காணப்படாமல் அப்படியே உள்ளதே. அப்படியென்றால், மாற்று வழிமுறைகள் உண்டா? அல்லது இந்த வழிமுறைகள் எவையும் சரியாகச் செயற்படுத்தப்படவில்லையா?

# சிறப்புற சேவையாற்றும் மண்டைதீவு வைத்தியசாலை

## நோயாளர்கள் மகிழ்ச்சி தெரிவிப்பு




மண்டைதீவில் கடந்த வருடம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்ட பிரதேச வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டதனைத் தொடர்ந்து நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.


மண்டைதீவில் 1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பிரதேச வைத்திய சாலை ஓயானது நீண்ட கால மாக, மண்டைதீவு மற்றும் அல் லைப்பிட்டி மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையினை வழங்கி வந்தநிலையில் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் முழுமையாக சேதமடைந்திருந்தது.மீண்டும் அதே இடத்தில் 26 மில்லியன் ரூபா செலவில் புதிதாக வைத்தியசாலை நிர்மாணிக்கப் பட்டு மக்களின் சேவைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வேலணை வைத்தியசாலை மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் இருந்து இரு மருத்துவர்கள் வாரத்தில் இரு நாட்கள் இப்பகுதி மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## கண்சிகிச்சை பெற இலக்கத்துண்டுக்கு பணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை பெறவரும் புது நோயாளர்கள் இலக்கத் துண்டு எடுக்கும் போது அங்கு இலக்கத்துண்டு வழங்கும் ஊழியர் 60 ரூபாவைக் கேட்டே இலக் கத்துண்டை வழங்குகின்றார். இந்த நடைமுறை புதிதாக வரும் நோயாளர்களுக்கு தெரியாத காரணத்தால் சிலர் பணத்தையும் கொண்டு வராது இலக்கத்துண்டை எடுக்க வரிசையில் உள்ளனர். அதுமட்டுமன்றி இந்த 60 ரூபா கொப்பிக்கு எனவும் தெரிவித்தனர். எனவே இந்த நடைமுறையினை முற் கூட்டியே தெரியப்படுத்தினால் தமக்கு இலகுவாக இருக்கும் என நோயாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# நெடுங்கேணி பெரியமடுவுக்கு மின்சார இணைப்பு ஆரம்பிப்பு



வவுனியா வடக்கு நெடுங்கேணி பெரியமடுவில் மக்களின் பயன்பாட்டுக்கு மின்சார இணைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான றோகண கமகேயின் ஏற்பாட்டில் மக்களுக்கான இம் மின்னிணைப்பு மின்வலு இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சார இணைப்பிற்கு 26 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் இதில் 300 குடும்பங்கள் பயன் அடைவர் என தெரிவிக்கப்படுகின்றது. (40)

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com


## அடேங்... கொக்க மக்கா!

இலங்கைக்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் வந்து சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை பெரும்பான்மைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு சென்று சந்தித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நமது மக்களுக்குத் தேவையான என்ன விஷயத்தைச் சாதித்தனர் என்று அறிந்துகொள்ளும் உரிமை நமக்கு உண்டு.

இந்தியப் பிரதமர் நேரடியாக இங்குவந்து நிலைமைகளை அவதானித்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான புதிய திட்டங்களையோ நகர்வுகளையோ ஏதேனுமொரு புதிய மாற்றத்தையோ த.தே.கூ. வினர் சாதித்திருப்பதாகச் சொல்வார்களா?

நாம் முரசில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததைப் போலவே, ஆயிரத்தோராவது முறையாகவும் அகில உலகத் தலைவர்களுக்கும் மனப்பாடமாகிவிட்ட அதே குற்றப் பட்டியல்களையே மோடியின் முன்னாலும் போயிருந்து வாசித்துவிட்டுக் கடமை முடிந்தது என்று திரும்பி வந்துள்ளனர்.

இராணுவப் பிரசன்னம், மீள்குடியேற்றம், கைதிகளின் விடுதலை, காணாமல்போனோர் விவகாரம் உட்பட தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினை மற்றும் நீண்ட காலமாகத் தொடரும் இனப் பிரச்சினை ஆகியவற்றுக்கு விரைவில் நியாயபூர்வமான தீர்வு காணப்படவேண்டும் எனவும், இதற்கான அழுத்தத்தை இலங்கையின் புதிய அரசுக்கு இந்திய அரசு வழங்க வேண்டும் எனவும் நாம் வலியுறுத்தினோம் என்றே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

"எல்லாரும் நல்லாயிருக்க வேணும், அதற்கு நீங்கள் ஏதாவது செய்ய வேணும்" என்று போடிபோக்கான ஒரு பஜனைப் பாடலை வந்து ஓதுபவர்களைக் கேட்டுவிட்டு, இலங்கைத் தமிழர்களுக்கு ஏதாவது புதிதாகச் சொல்ல வேண்டுமே என்ற குழப்பத்தோடு வந்திருந்த அயல்நாட்டுத் தலைவர் எவ்வளவு மகிழ்ந்திருப்பார்?

எனவே அவரும், "நீங்கள் அங்கு வந்தாலும் நாங்கள் இங்கு வந்தாலும் நீங்கள் பாடும் அந்த ஒரே பஜனையை இன்றும் கேட்டு மகிழ்ந்தோம். வழக்கமாக உங்களுக்குச் சொல்லும் அறிவுரையையே நாமும் மீண்டுமொருமுறை சொல்லிவிட்டுப் போய்விடுகிறோம்" என்று சந்திப்பை முடித்திருக்கிறார் இந்தியப் பிரதமர்.

அதாவது, த.தே.கூ. வினர் மோடியைச் சந்தித்தபின் ஊடகங்களுக்குத் தகவல் தருகையில் அவர்களே சொல்கிறார்கள்:

"எமது கருத்துக்களுக்கு இந்தியப் பிரதமர் பதிலளிக்கும்போது, நான் இன்று இலங்கை ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினேன். அவர் சாதகமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றார். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பொறுமை தேவை. நீங்கள் முன்னர் ஏனைய அரசுகளோடு அணுகியதைப் போல இந்த அரசோடு அணுகக்கூடாது.

இது ஒரு புதிய அரசு. பல மாற்றமான கருத்துக்களை இந்த அரசு கொண்டிருக்கின்றது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். புதிய அணுகுமுறை தந்திரோபாயங்களின் அடிப்படையிலேயே அரசுடன் பேசவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா எப்பொழுதும் உதவியாக இருக்கும்...."

இவ்வாறு தங்களிடம் இந்தியப் பிரதமர் கூறினார் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

"புதிய அணுகுமுறைக்கு மாறுங்கள்" என்று சொன்னால், நீங்கள் இப்போது செய்துகொண்டிருக்கும் பம்மாத்து அரசியலை மாற்றுங்கள் என்று அவர் சொல்லிவிட்டுப் போயிருப்பதாகத்தானே அர்த்தம்!

இன்னுமாடா இந்த அப்பிராணிகளுக்கு விளங்கவில்லை? அடேங்... கொக்க மக்கா என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.... வேறென்ன?

- *ஆசிரியர்*

# தேர்தல் பிரசாரங்களில் கட்சிகளுக்கு இட ஒதுக்கீடு

## பொதுக்கொள்கை அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய தேர்தலின் போது , பிரசாரங்களுக்கு அரசியல் கட்சிகளுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பில் பொதுக் கொள்கை ஒன்றை அமைப்பது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக குழு அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளையும் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆணைக் குழுவிற்கு அழைத்துள்ளதாக, மனித உரிமை ஆணைக்குழுவின் சட்டச் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்காக இடங்களை ஒதுக்கும் போது ஏற்பட்ட பிரச்சினைகளை கருத்திற்கு கொண்டே இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இறால் பண்ணையில் போதைப்பொருள் கண்டெடுப்பு

(கொழும்பு)

மதுரங்குளி பிரதேசத்திலுள்ள இறால் பண்ணையில் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் எனச் சந்தேகிக்கப்படும் திரவப் பொருள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

முந்தல் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பொருளின் நிறை 13 கிலோ 500 கிராமுக்கும் அதிகம் எனத் தெரியவந்துள்ளது. இதன்போது பண்ணையில் இருந்த மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எதுஎவ்வாறு இருப்பினும் இது இறால்களுக்காக பயன்படுத்தப்படும் திரவம் என கைதானவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது குறித்து அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகயை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

# மிக் விமான கொள்வனவு நிதிமோசடி அம்பலம்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டு உக்ரைனில் இருந்து மிக் ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது நிதிமோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் விசாரணைகள் தொடர்வதாக இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நிதிமோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக்கொள்வனவின் போது 14.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதிதுஸ்பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதேவேளை கெரவலப்பிட்டிய மின்சார நிலைய 122 மில்லியன் டொலர் நிதிமோசடி தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தெமட்டகொட பகுதியில் மனித கால்கள் கண்டெடுப்பு

கொழும்பு தெமட்டகொட பகுதியில் கழிவு நீரோடைக்கு அருகிலிருந்து இரண்டு மனித கால்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முழங்காலுக்கு மேல் வெட்டப்பட்ட நிலையில் இரண்டு கால்கள் கண்டெடுக்கப்பட்டதாக, பொலிஸ ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# 86 இந்திய மீனவர்கள் விடுதலை

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 86 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவுக்கமைவே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து 43 பேரும், திருமலைக் கடற்பரப்பில் வைத்து 43 பேரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களை யாழில் உள்ள இந்தியத் துணைத் தூரக அதிகாரிகள் பொறுப்பேற்றனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு நல்லெண்ண அடிப்படையில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# விசேடயோகா கருத்துரையும் விழிப்பூட்டல் நிகழ்வும்

யாழ்.யோகஅரங்கம் நடாத்தும் விசேட யோகா கருத்துரையும் விழிப்பூட்டல் நிகழ்வுகளும் நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்றுநாயன்மார் குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமைமாலை 4.00 மணிக்குயோகஅரங்க இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மூத்தயோகாஆசான்கலாபூசணம் வீ.என்.சிவநேஸ்வரராஜா பிராணாயாமசூட்சுமங்கள என்னும் தொனிப்பொருளில் விசேடகருத்துரையையும் பயிற்சியையும் வழங்குவார் தொடர்ந்து யோகாவினோதம், யோகாசனப் படக்காட்சி,கருத்தாடல், அனுபவப்பகிர்வு புதிய யோகாபயிற்சிக்கான பதிவுகள்ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். ஆர்வமுடையஅனைவரும் இதில் இணைந்துபயன் பெற்றுக கொள்ளுமாறு யாழ். யோகஅரங்கம் அறிவித்துள்ளது.யாழ்யோக அரங்கத்தினர், மருத்துவர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்காணப்பட்ட சிறப்புக்குரிய ஆசனம்,பிராணாயாமம், தியானம், சாந்த வழி முறைகள் முதலானவற்றைதமது யோகா பயிற்சி நெறியில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்ல பகீரதிக்கு தடை

(கொழும்பு)

அண்மையில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலி பிரிவின் தலைவி என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட முருகேசு பகீரதி எனும் பெண்ணை பிணையின் கீழ் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரான்சில் வசித்துவரும் பகீரதி, ஒரு பத்து ஆண்டுகாலம் கடற்புலிகள் பிரிவின் தலைவியாக செயலாற்றியவர் என நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலி முன்னாள் தலைவர்கள், அங்கிருந்தபடி புலிகள் இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயல்கின்றனர் எனவும் அந்த அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்.

இது சம்பந்தமாக பொலிசார் விசாரணைகளை செய்துமுடிக்கும்வரை இவரை பிணையில் விடலாமேயொழிய விடுதலை செய்யக்கூடாது என சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற விசாரணையின் முடிவில் பகீரதியை இரண்டு இலட்சம் ரூபாய்க்கு சரீர பிணையில் வெளியில் விட நீதிமன்றம் அனுமதியளித்தது.


ஆனால் பகீரதி வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், அதன்போது விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றி பொலிசார் தகவல் தர வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

# தோற்றுப்போன அரசியலின் தோற்காத தலைவர்கள்

சங்கர சிவன்

**வடமாகாண சபையில் விக்னேஸ்வரன் நிறைவேற்றிய இன அழிப்புத் தீர்மானம் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இடைவெளியை விரிவாக்கியிருக்கின்றது. இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்குவதைத் தவிர வேறெந்த விளைவும் இத்தீர்மானத்தினால் ஏற்படப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு இதனால் எந்த விதமான பலனும் இல்லை.**




**அரசியல் தீர்வு நடைமுறையின் ஆரம்பமாகப் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் முடிவை அரசாங்கம் பொதுத் தேர்தலுக்குப் பின் மேற்கொள்ளும் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. இந்த முயற்சியை நிராகரிப்பதற்கான முஸ்தீபு தான் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டிருக்கும் கருத்து. வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சி என்ற கோஷத்தை முன்வைத்துப் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிக்கும் முயற்சி.**

அறுபத்தைந்து வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே வாழ்கின்றார்கள். இனப்பிரச்சினை நாளுக்கு நாள் வளர்கின்றது. இனப்பிரச்சினை தீர்க்கப்படாததால் புதிய பல பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. இராணுவப் பிரசன்னம், இராணுவத்தின் பாவனையில் பொதுமக்களின் காணிகள், இடம் பெயர்ந்தவர்கள் சொந்தக் காணிகளில் குடியேற முடியாத நிலை போன்றன இனப்பிரச்சினை காரணமாகத் தோன்றிய புதிய பிரச்சினைகள். இனப்பிரச்சினைக்கும் அதன் காரணமாகத் தோன்றிய மற்றைய பிரச்சினைகளுக்கும் தமிழ்த் தலைவர்களால் இதுவரை தீர்வு காண முடியவில்லை. தீர்வை நோக்கிய நகர்வு கூட இடம்பெறவில்லை. அறுபத்தைந்து வருடங்களாக ஒரே வழிவந்த தலைமையே இருக்கின்றது. இவ்வளவு கால அரசியலில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணவோ தீர்வை நோக்கிய நகர்வை ஆரம்பிக்கவோ முடியவில்லையென்றால் இதைத் தோற்றுப்போன அரசியல் என்று தான் சொல்லவேண்டும். மக்களே இங்கு தோற்றவர்கள். தலைவர்கள் தோற்கவில்லை. அவர்கள் தங்கள் நாடாளுமன்ற ஆசனங்களை எப்போதும் காப்பாற்றிக் கொள்கின்றார்கள். சொந்த வாழ்க்கையில் எக்கச்சக்கமான முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றார்கள். தொடர்ச்சியாகத் தாங்கள் தோற்றுப்போனதற்கான காரணம் என்ன என்று மக்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

காலங்காலமாகத் தமிழ் தலைவர்கள் பின்பற்றி வரும் உணர்ச்சி அரசியல்தான் எல்லாவற்றுக்கும் காரணம். ஆவேசப் பேச்சுக்கள் மூலம் மக்களை உணர்ச்சிவசப்படுத்தித் தமிழ்த் தலைவர்கள் தங்கள் காரியத்தைச் சாதிக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீராமலிருக்க வேண்டும் என்பது இந்த உணர்ச்சி அரசியலின் பிரதான நோக்கம். அப்போது தான் தலைவர்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இனப்பிரச்சினைக்கு ஏதாவவொரு தீர்வு முன்வைக்கப்படும் பட்சத்தில் அதை நிராகரிப்பதற்காக அதனிலும் மேலான ஒரு தீர்வை வலியுறுத்துவது இத்தலைவர்களுக்கு வழக்கமாகிவிட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த தீர்வை நிராகரித்தபோது அது போதாது என்றும் முழுமையான சுயாட்சி அதிகாரம் கொண்ட தீர்வே தேவை என்றும் கூறினார்கள். இப்போது தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட மாகாண சபைகளை ஏற்றிருப்பது மாத்திரமன்றி கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவிக்காக முஸ்லிம் காங்கிரசுடன் சண்டைக்கு நின்றார்கள். வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை வீம்புக்காகவே நிராகரித்தார்கள் என்பதை இப்போது விளங்கிக்கொள்ளலாம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு மிகவும் அண்மித்ததும் சமஷ்டி அடிப்படையைக் கொண்டதுமான சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தையும் இத்தலைவர்கள் நிராகரித்தார்கள். புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்படுவதற்காகவே இந்தத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தார்கள். பின்னர் அதே தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முன்னைய அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தார்கள். இவர்களின் அரசியல் ஞானம் எவ்வளவு வங்குரோத்தானது என்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

முழுமையான சுயாட்சி அதிகாரம் என்ற உணர்ச்சிகரமான கோஷத்தை முன்வைத்து வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை நிராகரித்தார்கள். தனிநாட்டுக் கோரிக்கைக்காக அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தார்கள். 2015இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு நிச்சயம் என்ற உணர்ச்சிக் கோஷத்தை முன்வைத்து மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தார்கள். இப்போது தடுமாறுகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பிரதானமாக இரண்டு முன் தேவைகள் உள்ளன. நடைமுறைச் சாத்தியமானதும் நியாயமானதுமான தீர்வுத் திட்டம் ஒரு முன்தேவை. நியாயமான அரசியல் தீர்வு சர்வஜன வாக்கெடுப்புக்கூடாகவே நடைமுறைக்கு வர முடியுமென்பதால் சிங்கள மக்களின் ஆதரவு மற்றைய முன்தேவை. இந்த முன் தேவைகள் தொடர்பாக கூட்டமைப்பு தலைமை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலையில் 2015இல் தீர்வு நிச்சயம் என்பது வெறும் உணர்ச்சியூட்டல் கோஷமாகவே இருக்கப்போகின்றது. வழமைபோல இதுவும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கோஷமா?

கொஞ்சக் காலம் சர்வதேச சமூகத்தை வைத்துத் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றும் கூறித் தேர்தல்களில் வாக்குகளைப் பெற்றார்கள். அது அப்பட்டமான பொய் என்பது இப்போது அம்பலமாகிவிட்டது. பின்னர் மனித உரிமைகள் பேரவை மூலம் தீர்வு கிடைக்கும் என்றார்கள். அதுவும் வெறும் புலுடா ஆகிவிட்டது.

கிளிப் பிள்ளை போலச் சம்பந்தன் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார். மந்திர உச்சாடனம் போல இதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதால் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அரசியல் தீர்வு படிப்படியான நடைமுறைக்கூடாகவே சாத்தியமாகும். எனவே, அந்த நடைமுறையின் ஆரம்பம் எதுவாக இருக்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பு தெளிவான நிலைப்பாட்டை மேற்கொள்ளவில்லை. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் தீர்வு நடைமுறையின் ஆரம்ப கட்டம் என்ற பொதுவான அபிப்பிராயத்தைக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தையும் ஏற்கவில்லை. தீர்வு நடைமுறையின் ஆரம்ப கட்டம் எதுவாக இருக்கவேண்டும் எனக் கூறுவதற்கும் தயாரில்லை. இந்த நிலை அரசியல் தீர்வில் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக இல்லை.

நியாயமான அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்பதை மேலே பார்த்தோம். அந்த ஆதரவைப் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் கடப்பாடு தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. ஆனால், சிங்கள மக்களின் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அவர்களைப் பகைமை நிலைக்குத் தள்ளும் வகையிலுமான செயற்பாடுகளில் சில கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனர். வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளும் அவர் வெளியிடும் கருத்துகளும் அவ்வாறானவை. வடமாகாண சபையில் அவர் நிறைவேற்றிய இன அழிப்புத் தீர்மானத்தை உதாரணமாகக் கூறலாம். இந்தத் தீர்மானம் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இடைவெளியை விரிவாக்கியிருக்கின்றது. இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்குவதைத் தவிர வேறெந்த விளைவும் இத்தீர்மானத்தினால் ஏற்படப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு இதனால் எந்த விதமான பலனும் இல்லை.

கைவசமுள்ள தீர்வை நிராகரிப்பதற்காக அதனிலும் மேலான தீர்வை வலியுறுத்தும் உணர்ச்சி அரசியல் இன்னும் தொடர்கின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்க முடியாது என்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சி அமைப்பே தேவை என்றும் இந்தியப் பிரதமர் மோடியிடம் கூட்டமைப்பு கூறப்போவதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் சொல்கிறார். இது முழுமையான சுயாட்சிக்காக வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபையை நிராகரித்ததையும் தனி நாட்டுக்காக சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்ததையும் ஒத்தது.


அரசியல் தீர்வு நடைமுறையின் ஆரம்பமாகப் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் முடிவை அரசாங்கம் பொதுத் தேர்தலுக்குப் பின் மேற்கொள்ளும் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. இந்த முயற்சியை நிராகரிப்பதற்கான முஸ்தீபு தான் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டிருக்கும் கருத்து. வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சி என்ற கோஷத்தை முன்வைத்துப் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிக்கும் முயற்சி.

பதின்மூன்றாவது திருத்தத்தை ஆரம்ப கட்டமாக ஏற்றுச் செயற்படுவதன் மூலம் படிப்படியாக அரசியல் தீர்வை அடைய முடியும். பிரேமச்சந்திரன் கூறுகின்ற வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சி தமிழ் மக்கள் பெரிதாக விரும்பக்கூடிய தீர்வு. ஆனால், இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியம் இல்லாதது. இந்தத் தீர்வைக் காட்டிப் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பது அரசியல் தீர்வைத் தவிர்க்கும் முயற்சி. அன்று முதல் இன்று வரை அரசியல் தீர்வைத் தவிர்ப்பதிலேயே கூட்டமைப்பு அக்கறையாக இருந்து வருகின்றது.

ஒருவர் சிங்கள மக்களின் சந்தேகத்தை மேலும் வளர்த்து அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றார். இன்னொருவர் வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சி என்ற கோஷத்தை முன்வைத்துப் பதின்மூன்றாவது திருத்தத்தை . நிராகரிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்குத் தடைபோடுகின்றார். இந்த லட்சணத்தில் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று வாய்ப்பாடு ஒப்புவிக்கிறார் சம்பந்தன். அரசியல் தீர்வுக்குத் தடையான செயற்பாடுகளை ஒருபுறத்தில் அனுமதித்துக் கொண்டு மறுபுறத்தில் அரசியல் தீர்வு என்று வாய்ப்பாடு சொல்வது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான வெளிவேஷம். இப்படியாக மக்களை ஏமாற்றாமல் கூட்டமைப்பு அதன் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். இவ்வளவு காலமும் மக்களை ஏமாற்றியது போதும்.

# நாட்டின் சகல பகுதிகளுக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படும்

## சம்பிக்க தெரிவிப்பு



நாட்டிலுள்ள சகல பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி 24 மணித்தியாலமும் மின்சார வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமது நோக்கம் என மின்சக்தி மற்றும் சக்திவலுத்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மிகிந்தலையில் உள்ள பௌத்த வணக்கஸ்தலத்திற்கு 100 கிலோவோட் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அரசியலை திருத்தி அமைக்கும் நோக்கிலே இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


நீதிமன்றம், தேர்தல் செயற்பாடுகள், அரச சேவைகள் ஆகியன மட்டுமன்றி ஊழல் ஒழிப்புக்காகவும் ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். இது 100 நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய விடயமாகும் எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# யானைக் குட்டிகளை விற்றவர் மகரகமவில் கைது

குட்டி யானைகள் மூன்றை மூவருக்கு விற்ற குற்றச்சாட்டில் "யானை ரொஷான்" என்றழைக்கப்படும் மகரகமவைச் சேர்ந்த நிராஜ் ரொஷான் என்பவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வளர்ப்பு யானைகளை பதிவு செய்வதற்கான ஆவணங்களில் உள்ள தரவுகளை மாற்றிவிட்டு போலியான தரவுகளை இணைத்தே அவர், யானைக் குட்டிகளை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே அவரை, கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



மீட்கப்பட்ட யானைக் குட்டிகளை நீதிமன்றத்தின் அனுமதியுடன் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மகிந்தவுக்கு எதிரான விசாரணைகள் தொடரும்

## வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான விசாரணைகள் நிறுத்தப்பட மாட்டாது எனவும் சொத்து குவிப்பு தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக திரட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான சில தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அண்மைக் காலமாக விடுத்து வரும் அறிக்கைகளுக்காக விசாரணைகள் நிறுத்தப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வாதிகார ஆட்சியை நடாத்தி வந்ததாகவும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசியலில் மீள ஈடுபடுவதனை எவரும் தடுக்கவில்லை எனவும் அவர் விரும்பினால் அரசியலில் ஈடுபட முடியும என அவர் தெரிவித்துள்ளார்.

மறுபுறத்தில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சொத்துக் குவிப்பு தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ள உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்களின் சொத்துக்கள் களவாடப்பட்டிருந்தால் அது குறித்து விசாரணை நடாத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடாத்திய விசாரணைகளின் மூலம் பல பில்லியன் ரூபா பணம் பற்றிய விபரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# கொள்ளைச் சம்பவங்கள் 11 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

காலி கராப்பிட்டிய பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பதினொரு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி கராபிட்டிய ஜஸ்டின் கந்த என்னும் இடத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நள்ளிரவு வரையில் மேற்கொண்ட விசேட தேடுதல் வேட்டையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களின் வீடுகளிலிருந்து நீண்ட வாள்கள், கத்திகள், முகத்தை மூடும் வகையிலான தலைக்கவசங்கள், கடற்படை சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

# அரசியல் அழுத்தமற்ற இடமாக கதிர்காம ஆலயம் மாற்றப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

கதிர்காமம் ஆலயத்தை அரசியல் அழுத்தங்களற்ற இடமாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடு மாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புத்தசாசன அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பஸ்நாயக்க நிலமே ஒருவரை நியமிக்கும் போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக, உள்ளூராட்சிமன்ற உறுப்பினராக இருப்பது தகுதியற்றது என பௌத்த விகாரை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கடந்த அரசாங்கம் அதனை இரத்துச் செய்திருந்தது.

பஸ்நாயக்க நிலமேயின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்ற போதிலும், அதனை மேலும் இரண்டு வருடங்களாக நீடிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இந்த நடைமுறை செயற்படுத்தப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் அதனை அதிகாரமற்றதாக மாற்றுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புத்தசாசன அமைச்சர் கரு ஜயசூரியவுக்கு அறிவித்துள்ளார்.

## சட்டத்தை மறுசீரமைக்க குழு நியமனம்

ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது. நான்கு பேர் கொண்ட குழு ஒன்றே நியமிக்கப்பட்டுள்ளதாக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மகிந்த மடிஹேவா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலைக்கேற்ப, குறித்த குழுவினரின் ஆலோசனைக்கு அமைய ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் மறுசீரமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தொழிற்சங்கங்கள் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் ஆலோசனைகளும் சட்ட மறுசீரமைப்பின் போது கவனத்திற் கொள்ளப்படும் எனவும் மகிந்த மடிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தலில் கணனி மோசடி 100 வீதம் மாயையாகும்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலில் கணனி மோசடி என்பது ஓர் மாயை மட்டுமே என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி மாணவர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் கணனி மோசடி என்பதே 100 வீதமான மாயையாகும். திரட்டப்பட்ட தகவல்கள் வெளியிடங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

கணனியை நாம் ஓர் எண்ணிகைகளை கூட்டும் ஓர் கருவியாகவே பயன்படுத்துகின்றோம்.

கடந்த தேர்தலில் எதற்கும் அஞ்சாமல் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்ய நான் செயற்பட்டேன். நாட்டில் தேர்தல்கள் சுயாதீனமாக நடைபெறவில்லை என்ற நிலைப்பாடு காணப்பட்டது.

யார் வெற்றியீட்டினாலும் தோற்றாலும் மக்கள் சுயாதீனமாக வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அண்மையில் பிரதமர் ஓர் கருத்தை வெளியிட்டிருந்தார்.

வீட்டுக்கு அத்துமீறி பிரவேசிக்கும் ஒருவரை சுட முடியும் எனவும் தற்பாதுகாப்பு நோக்கில் சுட்டுக்கொலை செய்ய முடியும் எனவும்.

சட்டங்கள் எங்கு இயற்றப்படுகின்றன? நாடாளுமன்றில். நாடாளுமன்றம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது, தேர்தல் ஊடாகவே நாடாளுமன்றம் உருவாக்கப்படுகின்றது.

எனவே வாக்குச் சாவடிகளில் குழப்பங்களை விளைவிப்போரை சுட்டால் ஒன்றும் பிழையில்லை என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# பாரிய நிதிமோசடிகள் 12 முறைப்பாடுகள் பதிவு

## விசாரணைகள் ஆரம்பம்

பாரியளவிலான நிதி மோசடிகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பிரிவிற்குக் கிடைத்த 12 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் 122 மில்லியன் டொலர் நஷ்டம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த மின் உற்பத்தி நிலையம் 331 மில்லியன் டொலரில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதனை 210 மில்லியனுக்கு நிர்மாணிக்க முடியுமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனைத் தவிர, திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 65 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற தேசிய சம்மேளனத்தில் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



## எனது ஆதரவாளர்களை துன்புறுத்துகின்றனர்... இல்லையெனில் நான் இந்த அரசாங்கத்தை ஆதரித்துக்கொண்டிருப்பேன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'த ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலிருந்து...

**கேள்வி:** காலத்துக்கு முந்தி, மிகுந்த சுய நம்பிக்கையுடன் நடாத்திய தேர்தலில் உங்கள் தோல்விக்கு காரணம் என்ன?

**பதில்:** வடக்கு மற்றும் கிழக்கு வாக்களிப்பை நான் தவறாக கணித்துவிட்டேன். மாகாண சபைத் தேர்தலில் கூட 55 சதவீத வாக்களிப்பே இடம்பெற்றது. ஆனால், இந்தத் தேர்தலில் அது 80 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. இது ஏனென்று எனக்குத் தெரியாது.

**கேள்வி:** உங்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை அணிதிரட்டுவதற்கு றோ. வும் மேற்குலக ஏஜென்ஸிகளும் உதவியது என கூறுகின்றீர்களா?

**பதில்:** ஆம்.

**கேள்வி:** இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் மோடியை நீங்கள் சந்திப்பீர்களா?

**பதில்:** ஆம். அவர், எனது நாட்டுக்கு வரும்போது நான் அவரை சந்திக்க வேண்டும் என நினைத்திருந்தேன்.

**கேள்வி:** சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையில் இரு தடவை தங்கிச் சென்ற போது பிரச்சினை ஏற்பட்டது. அது விளக்க குறைவால் ஏற்பட்டதல்லவா?

**பதில்:** சீன கப்பல்கள் இங்கு வரும்போது அது சீனாவால் இந்திய தூதுவராலயத்துக்கு தெரிவிக்கப்படும். அது இந்த தடவையும் நடந்திருக்க வேண்டும். அது யாவருக்கும் தெரியும்.

**கேள்வி:** தமிழர் விடயத்தில் நீங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை எனவும் சீனாவின் கேந்திர செல்வாக்கை இந்த பிராந்தியத்தில் நீங்கள் அதிகரிக்க விட்டதாகவும் இந்தியா கூறுகின்றது. 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்திய உறவுகள் சீர் கெட்டது எவ்வாறு?

**பதில்:** 2012 இல் மனித உரிமைகள் பேரவையில் எனக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. இது சீனா தொடர்பிலான பிழையான விளக்கத்தால் ஏற்பட்டதென நான் நினைத்தேன்.

**கேள்வி:** புதிய அரசாங்கம் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்தியுள்ளது. இதையிட்டு நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** அது நல்லது. எனது அரசாங்கம் இந்தியாவை சீண்டவில்லை. எதையும் இந்தியாவிடம் கேட்டுவிட்டே வேறு நாடுகளிடம் கொடுத்தது. அம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம், கொழும்பு துறைமுகம் எல்லாமே அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. ஆனால், அவர்கள் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கவில்லை.

**கேள்வி:** புதிய ஆட்சிக்கு பின்னர் சீனாவுடனான உறவு பாதிக்கப்பட்டதாக தெரியவருகிறது. கொழும்பு துறைமுக நகரத் திட்டம் நிறுத்தப்பட்டதையிட்டு என்ன கருதுகின்றீர்கள்?

**பதில்:** அவர்கள், அப்படி செய்திருக்கக் கூடாது. நூறு வருடங்கள் போனாலும் இப்படியான துறைமுக உடன்பாடு எமக்கு கிடைக்காது.

**கேள்வி:** நீங்கள் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பாக ஏற்புடைமை அறிக்கையை பெறவில்லை. சீன கம்பனிக்கு இலங்கையின் இறைமையை விட்டுக்கொடுத்தீர்கள் என புதிய அரசாங்கம் கூறுகின்றது. இதை விட உங்கள் ஆட்சிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

**பதில்:** அவர்கள், அவற்றை நிரூபிக்க வேண்டும். சீன பிரதமர் வந்துதான் துறைமுக நகர் திட்டத்தை தொடக்கி வைத்தார். சீனாவோ, இந்தியாவோ, அமெரிக்காவோ தொடங்கிய திட்டங்களை அடுத்து வரும் அரசாங்கம் நிறுத்த முடியாது. இது சீனா சார்பான செயற்பாடு அல்ல.

**கேள்வி:** உங்கள் குடும்பத்தாருக்கு எதிராக பல வழக்குகள் உள்ளன. உங்கள் தம்பியின் கடவுச்சீட்டு பறிக்கப்பட்டுள்ளது. உங்கள் மகன் விசாரிக்கப்பட்டார். நீங்கள் இவற்றையிட்டு கவலைப்படவில்லையா?

**பதில்:** இது துன்புறுத்தல் மட்டுமேயாகும். எனது மகனுக்கு எதிரான வழக்கை அவர்கள் வாபஸ் பெற வேண்டியுள்ளது. எனது தம்பியான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சட்டப்படியே சகலதையும் செய்துள்ளார்.

**கேள்வி:** இந்தக் குற்றச்சாட்டுக்களை நீங்கள் நிராகரிக்கலாம். ஆனால் மிகவும் கடுமையான யுத்த குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டு உள்ளனவே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யுத்த குற்ற விசாரணையை தொடக்கவுள்ளதாக பிரித்தானியாவில் வைத்து கூறியுள்ளாரே.

**பதில்:** அவர், செய்யட்டும். யார் சொன்னார்கள் செய்ய வேண்டாமென்று. ஒரு சாதாரண பொதுமகன் கூட கொல்லப்படக் கூடாது என முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு நான் அறிவுறுத்தியிருந்தேன்.

**கேள்வி:** நீங்கள் இன்னொரு போட்டிக்கு தயாராகவுள்ளீர்களா? மீண்டும் அரசியலுக்கு வருவீர்களா?

**பதில்:** பல தலைவர்கள் தோற்றுப் போனதை நான் பார்த்துள்ளேன். ஆனால், தோற்ற பின்னரும் என்னைக் காணவும் மீண்டும் அரசியல்வாதியாக வரும்படி அழைக்கவும் பெரும்பாலானோர் வருவதையிட்டு நான் ஆச்சரியப் படுகின்றேன். நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.

**கேள்வி:** உங்கள் தீர்மானம் எதில் தங்கியுள்ளது?

**பதில்:** நான், கட்சியை ஜனாதிபதி சிறிசேனவிடம் கொடுத்தேன். எனது கட்சிக்காரர்களை அவர்கள் துன்புறுத்துகின்றனர். நான் வேலை கொடுத்தவர்களை வேலையிலிருந்து நிறுத்துகின்றனர். இப்படி நடக்காதிருந்தால் நான் இந்த அரசாங்கத்தை ஆதரித்துக்கொண்டிருப்பேன். அவர்கள் எம்மை விசாரிக்கவும் மறியலில் போடவும் கடவுச்சீட்டுக்களை பறிக்கவும் செய்துள்ளனர். அவர்களிடம் ஆதாரம் இல்லை. இந்த நிலையில் நான் எப்படி இளைப்பாற முடியும் ஓய்வு பெற்றுவிட்டதாக நான் ஒரு போதும் கூறவில்லை. இப்போது நான் ஓய்வுவெடுத்துக்கொண்டுள்ளேன்.

# கோட்டக்கல்வி அலுவலர்களின் பதவிகள் தவறாக பிரயோகிக்கப்படுகின்றன

## திணைக்கள உத்தியோகத்தர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் வரும் வலயக் கல்வித் திணைக்களங்களில் உள்ள கோட்டக் கல்வி அலுவலர்கள் (DEO Divisionl Education Officer) தமது பதவிப் பெயரைத் தவறாகப் பிரயோகிப்பதாக ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில வலயங்களில் கோட்டக் கல்வி அலுவலர்கள் தமது பதவிப் பெயரைக்கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் (Divisinal Education Divictor) எனத் தவறாகப் பயன்படுத்துகின்றனர் இது குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர்களோ, மாகாண திணைக்கள உயரதிகாரிகளோ எதுவித அறிவுறுத்தலையும் கூறாது மௌனமாக இருக்கின்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் பங்குபற்றும் பொது நிகழ்ச்சி ஒன்றில் வைத்தே அழைப்பிதழில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என பதவிப் பெயர் குறிப்பிடப்படும் வேடிக்கையும் நடைபெறுகிறது.

ஆங்கிலத்தில் அலுவலர் அல்லது அதிகாரி என்பதைக் குறித்த officer எனும் சொல் பாவனையிலுள்ளது.

பணிப்பாளர் என்பது Director எனும் சொல் கொண்டு அழைக்கப்படுகின்றது. officer = Director எனும் புதிய ஆங்கிலச் சமன்பாட்டை கோட்டக் கல்வி அலுவலர்கள் சிலர் தன்னிச்சையாக உபயோகிக்கின்றனர்.

இது குறித்து மாகாணக் கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஏன் கண்டுகொள்வதில்லையென வேறு திணைக்கள அலுவலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (90)

# வீதியில் நின்ற இளைஞர்கள் இனந்தெரியாதோரால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு முன்பாக நின்று கதைத்துக் கொண்டிருந்த நான்கு இளைஞர்கள், சேட்டினால் முகத்தை மூடிக் கொண்டு வந்த இரண்டு நபர்களினால் பொல்லுகளால் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 08.20 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நால்வரும் வீட்டுக்கு முன்னால் கதைத்துக் கொண்டிருந்த வேளை, முகத்தை மூடியபடி வந்த இரண்டு நபர்களும் இவர்களை நெருங்கியதும் கண் மூடித்தனமாகக் கையில் வைத்திருந்த பொல்லுகளால் தாக்கியுள்ளனர். நெற்றி, கை, வயிறு போன்றவற்றில் இவர்கள் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர்.

இருந்தும் சுதாகரித்துக் கொண்டு அவர்களைத் துரத்திச் சென்ற இளைஞர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் சற்றுத் தள்ளி உள்ள கோவிலுக்கு முன்பாக் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு அவர்கள் விரைவாகத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று இரவு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (137)

# பனைமரம் தட்டுப்பாடு

வரணிப்பிரதேசத்தில் தற்போது பனை மரத்திற்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது.

தற்போது இடைக்குறிச்சி மேற்கு கிழக்கு பகுதி மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு துரித கதியில் கட்டடப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் பயனாளிகள் பனை மரங்களைத் தேடி அலைவதோடு மிகஉச்ச விலையிலேயே வாங்க வேண்டிய (நிற்கும் பனைகளை) நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. (150)

# அந்தோனியார் ஆலய வருடாந்தத்திருவிழா

(நாவாந்துறை)

யாழ்.பண்ணை, மண்டைதீவுச் சந்தி குருசடித்தீவு தூய அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருநாள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என பங்குத் தந்தை அருட்திரு ஜே.ஜெயக்குமார் அடிகள் அறிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் திருநாள் நோவினைகள் நடைபெற்றுவந்தன. நேற்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை திருவிழா நடைபெற்றது.

இன்று காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலி திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும் திருநாள் திருப்பலி பங்குத் தந்தையால் ஒப்புக்கொடுத்தலை தொடர்ந்து சொரூப பவனியும், ஆசீர்வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

காலை 5.30 மணியில் இருந்து பண்ணை வீதியில் இருந்து குருசடித்தீவுக்கான இலவசப்படகுச் சேவைகள் நடைபெறுமெனவும், புனிதரின் ஆசீர்பெற அடியார்களை பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்கள் அன்புடன் அழைத்துள்ளனர். (68)

# அதிர்வுகள் நூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமகால சமூக ஆன்மீக அரசியல் விடயங்களை எடுத்துரைக்கும் அருள்பணி செ.அன்புராசா, அ.ம.தி.அடிகளாரின் 'அதிர்வுகள்' நூல் வெளியீட்டுநிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 286, கலைத்தூதுகலையகத்தில் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் ஆசிரியர் யோ.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.


கவிஞர் சோ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வின் செல்மர் எமில் வரவேற்புரையையும், அருட்கலாநிதி அ.பி.யெயசேகரம் அடிகளார் ஆசியுரையையும், கலாநிதி கந்தையா சிறிகணேசன் வெளியீட்டுரையையும், இலக்கியவித்தகர் திருமதி கோகிலாமகேந்திரன் நயப்புரையையும் ஆற்றவுள்ளனர். எனவே இந்த நிகழ்வுக்கு இலக்கிய அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வெளியீட்டு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## தீபன்ராஜ் சிறப்பு பந்து வீச்சு

# யாழ். மத்தி அபார வெற்றி





படப்பிடிப்பு : சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

தீபன்ராஜின் அபாரமான பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 45 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற சென். ஜோண்ஸ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியைத் தொடர்ந்து நடைபெறும் 13ஆவது ஒரு நாள் போட்டி நேற்று சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி கோமிதகன் மற்றும் திரேசன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஆரம்பத்தைப் பெற்றது. ஆரம்ப விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 50 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து லோகதீஸ்வர், யதுசன், திசந்துயன், கே. கபில்ராஜ் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய யாழ். மத்திய கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டவண்ணமிருந்தன. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 43.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோமிதகன் 86 பந்துகளை எதிர்கொண்டு 40, கௌதமன் 32 பந்துகளை எதிர்கொண்டு 26, திரேசன் 41 பந்துகளை எதிர்கொண்டு 25, ஜெரோசன் 27 பந்துகளை எதிர்கொண்டு 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 21 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, யதுசன், திசந்துஜன், கே. கபில்ராஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி தீபன்ராஜின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களை பறி கொடுத்தது. குறிப்பாக சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் ஏழு விக்கெட்டுக்களையும் 76 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்து திணறியது. இந்நிலையில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த லக்சி, கஜீபன் இணை பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றபோதிலும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 33 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஏனைய விக்கெட்டுக்களும் அடுத்தடுத்து சாய்க்கப்பட்டன. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 31.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லக்சி 29 பந்துகளில் 20, எஸ். கபில்ராஜ், கஜீபன் ஆகியோர் தலா 14, பிளமிங் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தீபன்ராஜ் 38 ஓட்டங்களைக் கொடுத்து அறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் அணியின் வெற்றிக்கு பெரும் துணை புரிந்தார். இவர் மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் கௌதமன் இரண்டு, மதுஷன், தனுஜன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக தீபன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டி நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராசா மற்றும் ஏயட்ரெல் நிறுவன உயர் அதிகாரிகள், இரு கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இப்போட்டித் தொடருக்கு கடந்த ஆண்டு முதல் ஏயட்ரெல் நிறுவனம் முழு அனுசரணை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (42, 20)

**உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் இன்றுடன் நிறைவு பெறுகின்றன. காலிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## ரெய்னா சதம்; வென்றது இந்தியா

(ஒக்லாண்ட்)

சிம்பாப்வே அணிக்கெதிரான உலகக் கிண்ண இறுதி லீக் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் பி பிரிவுக்கான ஆட்டமொன்று நேற்று நியூசிலாந்தின் ஒக்லாண்ட்டில் நடைபெற்றது. இதில் இந்திய, சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சிம்பாப்வே அணி ரெய்லர், வில்லியம்ஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சிம்பாப்வே அணி 48. 5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பி. ரெய்லர் 110 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக 138, வில்லியம்ஸ் 50, எர்வின் 27, சிகண்டர் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் சமி, எம்.சர்மா, உமேஷ் யாதவ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 288 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் டோனி, சுரேஷ் ரெய்னாவுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இறுதி வரை களத்தில் நின்று ஆடிய இந்த ஜோடி அணியின் வெற்றியையும் உறுதி செய்தது. முடிவில் இந்திய அணி 48.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுரேஷ் ரெய்னா 104 பந்துகளை எதிர்கொண்டு 110, டோனி 85 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்னா, டோனி 196 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மற்றும் ஹோலி 38 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் பங்யங்கார இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்னா தெரிவு செய்யப்பட்டார்.

## ஸ்ரார்க் அபாரம்; ஆஸிக்கு இலகு வெற்றி

(ஹோபர்ட்)

ஸ்கொட்லாந்துக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில், அவுஸ்ரேலிய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது. இதில் அவுஸ்ரேலியாவின் ஹோபர்ட்டில் நேற்று நடைபெற்ற ஏ பிரிவு கடைசி லீக் போட்டியில், அவுஸ்ரேலிய, ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய ஸ்கொட்லாந்து அணி ஸ்ரார்க்கின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஸ்கொட்லாந்து அணி 25.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மெக்லியாட் 22, மக்கான் 40, ஜோஷ் டேவி 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார்க் நான்கு கம்மின்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 15.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மைக்கல் கிளார்க் 47, வட்சன் 24,



வோர்னர் ஆட்டமிழக்காது 21, ஆரோன் பின்ச் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மழை காரணமாக இப்போட்டி இடையிடையே தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் ஸ்ரார்க் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்ரேலிய அணி 9 புள்ளிகளுடன் ஏ பிரிவில் 2ஆவது இடத்தை உறுதி செய்தது. முதலிடத்தில் நியூசிலாந்து அணி (12 புள்ளி) உள்ளது. இலங்கை (8 புள்ளி), பங்களாதேஷ் (7) அணிகள் முறையே 3, 4ஆவது இடங்களை பிடித்தன.


# பாடசாலை மட்ட இல்ல மெய்வல்லுநர்

பூநகரி மட்டுவில்நாடு அ.த.க. பாடசாலை (160)




கிளிநொச்சி முழங்காவில் ம.வித்தியாலயம் (160)

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி (70)




புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை




வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் (70)

# நிறைவேற்ற முடியாவிடின் வாக்குறுதி அளித்தது ஏன்?

— எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

“தற்போதுள்ள எதேச்சாதிகார நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு பதிலாக அமைச்சரவையூடாக



நாடாளுமன்றத்தோடு தொடர்புடைய நிறைவேற்று முறையொன்றை அறிமுகப்படுத்தல்” உள்ளிட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் நகலை ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பதாக, மைத்திரிபால சிறிசேன, தேர்தல் காலத்தில் எந்த அடிப்படையில் மக்களுக்கு வாக்குறுதியளித்தார் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

ஏனெனில், ஜனவரி மாதம் 21 ஆம் திகதியிலிருந்து ஒன்றரை மாதம் சென்றுள்ள போதும் அந்த நகல் சட்டத்திருத்தம் எப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

அந்த சட்ட வரைவு தயாராக இருப்பதாக, பிரதமர் கடந்த சனிக்கிழமை கூறியிருந்த போதிலும் இந்தத் தாமதத்தை புரிந்து கொள்வது கடினமாகவே இருக்கிறது.

அதேவேளை, சமர்ப்பிக்கப்பட விருக்கும் சட்ட வரைவு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான ஒன்றாக இருக்குமா என்பதும் இன்னமும் சரியான முறையில் தெளிவாக வில்லை. ஏனெனில் அரசாங்கத்தின் தலைவர்கள் இப்போது அதைப் பற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதைப் பற்றியன்றி நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களில் சிலவற்றை குறைப்பதைப் பற்றியே அரசாங்கத்தின் தலைவர்களில் பலர் இப்போது கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

தற்போதைய ஜனாதிபதி முறையை முற்றாக இரத்துச் செய்யாவிட்டால் அது தெளிவாகவே ஜனாதிபதியும் அவரது தலைமையில் தேர்தல் காலத்தில் உருவாக்கிய புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களும் மக்களுக்கு அளித்த பிரதான வாக்குறுதியையே மீறியதாகும்.

குறைந்த பட்சம் நிறைவேற்று ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் வகை சொல்லும் வகையிலாவது அரசியலமைப்பு திருத்தப்படா விட்டால் அவ்வாறானதோர் சட்டத் திருத்தத்தால் எவ்வித பயனும் இல்லை.

தாம் பதவிக்கு வந்து 12 நாட்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளிப்பதாக இருந்தால், அப்போதே அதற்கான சட்ட வரைவொன்று தயார் நிலையில் இருந்திருக்க வேண்டும். தேர்தலுக்குப் பின்னர் சட்ட வரைவு தயாராக இல்லை என்று கூறுவதற்கோ வேறு காரணங்களை முன்வைப்பதற்கோ ஜனாதிபதிக்கோ அல்லது புதிய அரசாங்கத்தின் ஏனைய தலைவர்களுக்கோ தார்மிக உரிமை இல்லை.

அதனை தாமதப்படுத்த அரசாங்கத்துக்கு தார்மிக உரிமை இல்லாமல் போவதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால், இந்த விடயத்தில் ஏறத்தாழ நாட்டில் சகல அரசியற் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளமையே.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதைப் பற்றி இல்லாவிட்டாலும் ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புக்கூறச் செய்ய வேண்டும் என்பதில் அனேகமாக சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான சட்ட வரைவு தயாராக இருக்கா விட்டால் பதவிக்கு வந்து 12 நாட்களில் அதனை இரத்துச் செய்வதாக தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதி உண்மையான வாக்குறுதியா என்ற கேள்வி எழுகிறது.

அது நேர்மையாக முன்வைக் கப்பட்ட வாக்குறுதியாக இருந்தால் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் முடிவடைந் துள்ள இத்தருணத்திலாவது அது நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டு இருக்க வேண்டும். அல்லது இப்போதாவது அதற்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

தேர்தல் முறையை திருத்து வது தொடர்பான அரசாங்கத்தின் வாக்குறுதி சம்பந்தமாகவும் இந்த வாதம் பொருந்துகிறது. “விருப்பு வாக்கு முறையை முற்றாக இரத்துச் செய்து சகல தேர்தல் தொகுதிகளுக்கும் எம்.பி. ஒருவர் கிடைக்கும் வகையில் தொகுதிவாரி முறையும் கலந்த தேர்தல் முறையொன்றை சிபார்சு செய்வதற்காக ஜனவரி மாதம் 28 ஆம் திகதி, சர்வகட்சி குழுவொன்றை நியமிப்பதாக” அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்து இருந்தது.

அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத் திட்டத்தின் பிரகாரம் மேற்படி குழுவினால் சிபாரிசு செய்யப்படும் தேர்தல் சட்ட திருத்தம் மார்ச் மாதம் 17ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால் அந்தக் குழுவாவது இன்னமும் நியமிக்கப்பட வில்லை.

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் மற்றும் தேர்தல் சட்டத் திருத்தம் ஆகியவற்றுக்காக அரசாங்கம் புதிதாக குழுக்களை நியமித்துக் கொண்டு கஷ்டப்படத் தேவையில்லை. ஏனெனில் இவ்விரண்டு விடயங்கள் தொடர்பாகவும் ஏற் கெனவே தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் இருக்கின்றன.

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி தமது நூறு நாட்கள் வேலைத் திட்டத்தின் மூலம் வாக்குறுதியளித்திருந்தார்.

அவ் வேலைத் திட்டத்தின் பிரகாரம் அச்சட்டமூலம் மார்ச் மாதம் 20 ஆம் திகதி நிறைவேற்றப்படவும் வேண்டும்.

அந்த விடயமும் குறித்த காலத்தில் நிறைவேறுமா என்பது இப்போது சந்தேகமாகவே இருக்கிறது. இந்த விடயத்தில் சட்ட மூலம் தயாராக இல்லை என அரசாங்கம் கூற முடியாது.

அவ்வாறு சட்டமூலம் தயாராக இல்லா விட்டால் திகதி குறிப்பிட்டு இது தொடர்பாக ஏன் வாக்குறு தித்தீர்கள் என் மக்கள் கேட்கலாம்.

# மேற்குநாடுகள் தீர்வு தரும் என்கின்ற அபத்தம்!

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.

உள்ளக விசாரணைகள் என்கிற அறிவிப்பை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் அரவணைப்போடு வெளியிட்டிருக் கின்ற மைத்திரிபால சிறிசேன அரசாங்கம், அதற்கான ஒத்து ழைப்புக்களை ஐக்கிய நாடு களின் மனித உரிமைகள் பேரவையிடமும், தென்னா பிரிக்காவிடமும் பெற்றுக் கொள்வதற்கும் முடிவெடுத் துள்ளதாகக் கூறியுள்ளது.



கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவை யின் 28ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீரவும் அதனைப் பிரதி பலித் திருக்கின்றார். அது கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது.

“நாட்டின் சகல மக்களையும் உள்ளடக் கியதான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் தன்மையுடனான பயணத்தின் மீது நாம் முழுமையான நம்பிக்கை வைத்துள் ளோம். அதனை திருப்திகரமாக முன்னெடுப்பதற்கான நுட்பங்கள் மற்றும் மனித வளங்களைத் தயார்படுத்தி வருகின்றோம். ஆனாலும், இந்தப் பயணத்திற்கு சர்வதேச சமூகத்தினரின் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப ஒத்து ழைப்பு, ஆலோசனை என்பன அவசியம்.

எமது அரசாங்கம் உலகம் முழுவதிலு முள்ள பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற் படவே விரும்புகிறது. இதற்கான எமது அணுகுமுறை பேச்சுவார்த்தைகள், ஒத்துழைப் புக்கள், புரிந்துணர்வு மற்றும் கற்றல் மூலமாக அமையுமே தவிர முரண்பாடாக அமையாது.

இதன் அடிப்படையில், அரசாங்கம் தென்னா பிரிக்க அரசாங்கத்துடன் கடந்தவாரம் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதுடன், ஐக்கிய நாடு களின் விசேட அறிக்கையாளர் பப்லோவுக்கு இலங்கை வருமாறும் அழைப்பு விடுத்துள் ளோம். மனித உரிமை சமவாயத்தில் இலங்கை பங்குதாரர் என்ற ரீதியில் அனைத்து பரிந்துரை களையும் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புடன் செயற்படும்.

அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு இந்த சபை (மனித உரிமைகள் பேரவை), ஆணையாளர், பங்குதாரர்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் இலங்கை டயஸ்போராக்கள் (புலம்பெயர் ஈழத் தமிழர்களும், அவர்கள் சார் அமைப்புக்களும்) எம்மீது நம்பிக்கை வைத்து எமது செயற்பாடு களைப் பலப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.”

மனித உரிமைகள் பேரையில் மங்கள சமரவீர ஆற்றிய [illegible]மேற்கண்ட உள்ளடக்கங்களைக் கொண்டி ருந்த உரை. இலங்கை அரசாங்கத்தினால் மாத் திரம் தயார் செய்யப்பட்டிருக்கின்றது என்ற நிலை

குறிப்பாக, சர்வதேசத்தோடு ஒத்துழைப்பது. ஐக்கிய நாடுகளின் விசேட அறிக் கையாளரை நாட்டுக்கு வருமாறு அழைத்தல் மற்றும் புலம் பெயர் தமிழ் மக்களுடன் இணக்கமாக செயற்பட விரும்புவது என்று அந்த உரையில் இனிப்புத் தடவிய பெரும் பகுதி காணப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ காலத்து அமைச்சர்கள் மேற்குநாடுகளையும், ஐக்கிய நாடுகளையும், புலம்பெயர் தமிழர்களையும் நோக்கி வைக்கும் குற்றச் சாட்டுக்கள் எதுவும் மங்கள சமரவீரவின் உரையில் இல்லை. இவ்வளவு இணக்க மான அரசாங்க மொன்று இலங்கையில் இருக்கின்றது. ஆகவே, அனைத்துப் பிரச்சினைகளையும் உள்நாட்டில் பேசித் தீர்ப்போம். அதற்கான அர்ப்பணிப்பு எம்மிடம் இருக்கின்றது என்கிற அறிவித் தலை அந்த உரை பிரதிபலித்திருக்கின்றது.

உண்மையிலேயே மகிந்த ராஜபக்ஷ காலத்து உரைகளை விட மங்கள சமரவீரவின் இந்த உரையை தமிழ் மக்கள் பெரும் அச்சுறுத்தலாக உணர வேண்டியுள்ளது. ஏனெ னில், இறுதி மோதல்களின் போது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதை “பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டமை சிறப்பான விடயம்” என்று குறிப்பிட்ட மங்கள சமரவீர, எந்தவொரு இடத்திலும் போர்க்குற்றங்கள் அல்லது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றது என்ற விடயங்களை குறிப்பிடவில்லை. அதனை, மிக இலாவகமாகத் தவிர்த்திருந்தார். அந்த உரையினை வெளிப்படையாகப் பார்த்தால் காணப்படும் இனிப்புத் தடவிய பகுதிகளுக்குப் பின்னால் பெரும் விஷமுள்ள பகுதிகள் ஒளித்திருக்கின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் முன்னணி அரசியல் தலைவரொருவர் பேஸ்புக் நிலைத்தகவ லில் சில விடயங்களை எழுதியிருந்தார். அது, மேற்கு நாடொன்றின் தூதுவருடனான உரையாடல்.

“இலங்கையில் ஆட்சிமாற்றமொன்று ஏற்பட்டு புதிய அரசாங்கம் பதவியேற்றிருக்கின்றது. ஆக, அதனை ஓரளவுக்கு விட்டுப் பிடிக்க வேண்டிய தேவை எமக்கு (மேற்கு நாடுகளுக்கு) உள்ளது. ஆனால், தமிழ் மக்கள் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதனை தமிழ்த் தலைமைகள் முன்னின்று நடத்த வேண்டும்...” என்றிருக்கின்றார் அந்த தூதுவர்.

தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்கிற விடயத்துக்குப் பின்னால் நியாயமான காரணங்கள் இல்லாமல் தமிழ் மக்களை கருவிகளாக கையாளும் தந்திரம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டு தமக்குச் சார்பான அரசாங்கம் இலங்கையில் இருந்தாலும், அந்த அரசாங்கம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்து மீறும் தருணங்கள் வரலாம். அதனைக் கையாள்வதற்கான மீண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கலாம் என்பது மேற்குநாடுகளின் காலம் காலமான உத்தி. அப்படிப்பட்டவர்கள் எமக்கான தீர்வினைப் பெற்றுத்

...ருந்த உள்ளூர். இலங்கை அரசாங்கத்தினால் மாத திரம் தயார் செய்யப்பட்டிருக்கின்றது என்ற நிலை யைத் த...டி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடு களில் ...காட்டல்களுக்கு அமைய எழுதி வாசிக்கப்பட்டிருக்கின்றது.

...அப்படிப்பட்டவர்கள் எமக்கான தீர்வினைப் பெற்றுத் தந்துவிடுவார்கள் என்று நம்புவது எவ்வளவு அபத்தமானது.

# இனத்துரோகி முத்திரைகளும் கொடும்பாவி எரிப்புக்களும்

- சாந்தி சச்சிதானந்தம் கட்டுரையிலிருந்து.




எதனையும் விவாதித்துத் தீர்க்க இயலாத் தன்மையினால், தமது பக்க நியாயத்துடன் மக்கள் மத்தியில் போய் அதனை விளக்கி அவர்களையும் தம் பக்கம் இழுக்கும் பொறுமையோ அர்ப்பணிப்போ இல்லாமையால், ஒடிப்போய் "துரோகி" பட்டத்தைச் சூட்டுவதே எமது அரசியலின் முத்திரையாகிற்று. அது எங்கு எம்மைக் கொண்டு போயிற்று என்பதை சற்று நினைவு கூரவே வேண்டும்.

அளவற்ற சகோதர இனப்படுகொலைகள், ஒரு வித வேற்று அபிப்பிராயத்திற்கும் இடம்கொடாத விடுதலைப் போராட்ட அணி, கடைசியில் அதன் முற்றான அழிவு. ஏன்? வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டதற்கும் இந்த "எங்களுடன் இல்லாவிட்டால் நீ அவர்களுடன்" சித்தாந்தம் காரணமாயிற்று. 40 வருடங்கள் ஆகியும் இன்றும் அதைத்தான் செய்கின்றோம் எனில், வடக்குத் தமிழ் மக்கள் அரசியலிலிருந்து இதுவரை என்ன பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கின்றனர்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குள் ஒற்றுமையாக இயங்க முடியவில்லையென்பது பல வருடகாலமாக எமக்கெல்லோருக்கும் தெரியும். அதற்குள் தமிழரசுக் கட்சியின் கை ஓங்கியிருந்ததும் எமக்குத் தெரியும்; இக்கட்சிகளுக்குள் ஒருவித ஜன நாயக நடைமுறைகளும் இருக்கவில்லை என்பதும் எமக்கு நன்றாகத் தெரியும்.

இதெல்லாம் தெரிந்திருந்தும் தேர்தலுக்குத் தேர்தல் அவர்களுக்கு வாக்குகளை அள்ளிக் கொடுத்தோம். ஆனால், கேள்விகளைக் கேட்கவில்லை. கட்சிக் கட்டமைப்புக்களை ஏற்றமுறையில் கட்டினார்களா? வேட்பாளர்களை எந்த அடிப்படையில் தெரிவு செய்தனர்? மக்கள் மத்தியில் என்ன வேலைத்திட்டத்தினை வைத்திருக்கின்றனர்? என ஒன்றையும் கேட்கவில்லை. கேட்டால் பதில் வரவில்லையெனில் மாற்றுக் கட்சிகளை உருவாக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை.

யாராவது இக்கட்சிக்குப் போட்டியாக சுயாதீனமாகக் களமிறங்கினால் அவர்கள் யார்? என்ன கொள்கையின் அடிப்படையில் இறங்குகிறார்கள்? என ஆராயாது ஒரேயடியாகத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பினோம். இப்போது திடீரெனத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களை "இனத்துரோகி" எனப் பச்சை குத்தி யாழ். மாவட்டம் முழுவதும் அவர்களது படங்களைத் தூக்கிலிடுவதும் தீக்கிரையாக்குவதையும் செய்தால் எமது 'அரசியலின் சின்னத்தனங்களை என்ன சொல்ல.

இவர்கள் எதற்காக துரோகியாக இனம் காட்டப்படுகின்றார்கள் என்றால் அதுவும் நகைப்பிற்கிடமானது. இது எங்கும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. சுதந்திர தின விழாவுக்கு சென்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த அறிக்கையினை வெளியிடுவதனைப் பின்போட்டதனை ஏற்றுக் கொண்டது என அவரவர் காரணம் கற்பித்து விளக்குகின்றனர்.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்ததற்குப் பின்னர் ஒரு மாற்றமான அரசியற் சூழ்நிலையில், தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை பற்றிப் பார்ப்பதற்கேனும் தயாராக வரும் ஓர் புதிய அரசில் அதன் சுதந்திர தின விழாவில் பங்கேற்பது பற்றி இரு தரப்பு அபிப்பிராயங்கள் நிலவக் கூடுமல்லவா?

சம்பந்தரும் சுமந்திரனும் அதில் பங்கேற்றது இனத்துரோகமா? அவர்கள் விழாவில் கலந்து கொண்டார்கள் என்பதைவிட, இத்தீர்மானத்திற்கு கட்சி மட்டத்தில் இணக்கத்தினைப் பெற வைப்பதற்கு என்ன செய்தார்கள். அதற்குரிய பொறிமுறைகள் கட்சிக்குள் இருக்கின்றனவா என்கின்ற கேள்விகளையல்லவா நாம் கேட்க வேண்டும்?

அதே போலத்தான் ஜெனீவா அறிக்கையின் விடயமும். ஏதோ அறிக்கை வெளிவந்தவுடன் போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்கப் போவது போலல்லவா துள்ளிக் குதிக்கின்றனர்? அதற்கென ஒரு நீண்ட முறைவழி இருக்கின்றதே ஐயா. இந்த அறிக்கை இப்போது மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டால், அதற்கு அங்கத்துவ நாடுகள் "இது புதிய அரசு, அதற்கு சிறிது கால அவகாசம் கொடுப்போம்" என விவாதத்தில் அதனைக் கை தூக்கி விடுவது நிச்சயமாக நடந்திருக்கும்.

இப்பொழுது அறிக்கை வெளியிடுவதைப் பின்போட்டாலும் அதற்கேற்ற முறையில் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னதாக இலங்கை அரசு கற்ற பாடங்கள் சிபாரிசினை செயற்படுத்துவது தொடர்பில் பல முன்னேற்றங்களைக் காட்ட வேண்டும் என அதற்குச் சுறப்பட்டிருக்கின்றது. அதற்காகத்தானோ என்னவோ இது பிற்போடப்பட்டது தமிழருக்கு சாதகமானது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியது தவறென்றாலுங்கூட, அதற்காக அவர் துரோகியா? அவர் கொடும்பாவி எரிப்பதுவரை செல்லலாமா? வித்தியாசமான அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ள முடியாத தன்மையல்லவா இது?

சிலர் தமது நாடாளுமன்றக் கதிரைகளைத் தக்க வைப்பதற்காக இந்தத் துரோகி விளையாட்டினை ஆரம்பித்து வைத்திருக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியிலிருந்து இதற்கு எதிராகப் பெருங் கண்டனக் குரல் எழுப்பப்பட வேண்டும். முன்பு இப்படியெல்லாம் நடக்கும்போது நாம் வாளாவிருந்ததினாலேயே எங்கள் அரசியல் இவ்வளவு அழிவுகளைக் கண்டது.


சிறு பிள்ளைத்தனமான துரோகி அரசியலை யார் முன்னெடுத்தாலும் அவர்கள் நிராகரிக்கப்படவேண்டும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் எங்கள் இளைஞர்களைத் திசை திருப்ப முயற்சி செய்தால் அது தடை செய்யப்படவேண்டும். கூட்டமைப்பின் தலைவர்களும் தாம் இதுவரைகாலமும் செய்து வந்த அரசியலினை மீள் பரிசீலனை செய்வதற்கு முன்வரவேண்டும்.

# த.தே.கூ. வின் தலைமையை மாற்ற திட்டமிடப்படுகிறதா?

இரா. சம்பந்தன் அவர்களால் வடமாகாண முதலமைச்சராக கொண்டுவரப்பட்ட விக்னேஸ்வரனை சம்பந்தனுக்கு எதிராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவராக்கும் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

வட மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியதால் விக்னேஸ்வரன் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும், புலம்பெயர் அமைப்புக்கள் மத்தியிலும் 'ஹீரோ'ஆகி விட்டார் என்றே கூறவேண்டும்.

மூத்த தலைவரான இரா. சம்பந்தன் மற்றும், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இப்போது துரோகிகளாக்கப் பட்டுள்ளனர். இதுவும் விக்னேஸ்வரன் 'ஹீரோ' ஆவதற்கு வழியை திறந்துவிட்டுள்ளது.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் சம்பந்தன், சுமந்திரன் தொடர்பிலான முரண்பாடுகள் கடந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்திலேயே வலுப்பட ஆரம்பித்து விட்டது. மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட எதிரணியினருடன் சுமந்திரனே பல்வேறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு அந்த அனுமதியை சம்பந்தரே வழங்கியிருந்தார்.

அச்சமயத்தில் இந்தியா சென்றிருந்த சம்பந்தன் அங்கிருந்து சுமந்திரனுடன் தொடர்பு கொண்ட வண்ணமிருந்தார். இவ்வேளையில் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களோ இந்த பேச்சுக்களில் கலந்து கொள்ளவில்லை. பேச்சுக்கள் தொடர்பான விடயங்களும் சுமந்திரனால் அல்லது சம்பந்தனால் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படவில்லை எல்லாமே சம்பந்தன், சுமந்திரன் இடையிலேயே இருந்தது.

சுமந்திரனின் ஏற்பாட்டில் ஒரு தடவை மட்டும் கொழும்பில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டு அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அச்சந்திப்பில் பொது எதிரணியின் உறுப்பினர்கள் பலர் இருந்த போதும், அவர்கள் குறிப்பாக எதனையும் பேசவில்லை. ஏனெனில், முன்னரே சுமந்திரனுடன் அனைத்தும் பேசப்பட்டு விட்டது. எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை உருவாக்குவதிலும் சுமந்திரன் பங்காற்றியிருந்தார். இவை கட்சி உறுப்பினர்களுக்கு அப்போது சொல்லப்பட்டிருக்கவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இதில் சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி வழங்கும் பேரமும் அடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். இங்கு தான் தொடங்கியது முரண்பாடுகளின் வேகம்.

அடுத்தது, இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தன், சுமந்திரன் இருவரும் கட்சியின் அனுமதியின்றி கலந்து கொண்டமை பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது. இந்த வேளையில் அடுத்த 'கியர்' போடப்பட்டு, இப்போது, ஐ.நா மனித - உரிமை ஆணைக்குழுவால் விசாரணை அறிக்கை பிற்போடபட்டமைக்கும் சம்பந்தன், சுமந்திரன் இருவருமே காரணம் என்று கூறப்பட்டு பிரச்சினை 'ரொப்' கியரில் வேகம் பிடித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் வைத்து சுமந்திரனின் உருவப்படம் எரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 24 ஆம் திகதி லண்டனில் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் சம்பந்தன், சுமந்திரன் இருவரதும் உருவப் படங்கள் எரிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதும், லண்டனில் நடைபெற்றதும் ஐ.நா விசாரணை அறிக்கை பிற்போடப்படக்கூடாது என வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள். இதன் போதுதான் இவர்களின் உருவப்படங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் முதன்மையானவராக பங்கேற்றிருந்த நிலையிலேயே சுமந்திரனின் உருவ பொம்மை வீதியில் இழுத்து வரப்பட்டு தீயிடப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து தனக்கு தெரியாது என சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இதில் கலந்துகொண்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபை மற்றும், பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு நடக்கப் போகின்றது என்பதை தாங்கள் முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்ததாக கூறுகின்றனர்.

இதேவேளை, லண்டனில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டமும், உருவப் படங்கள் எரிப்பும் பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டிலேயே நடைபெற்றுள்ளது.

ஐ.நாவுக்கும், அமெரிக்காவிற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் எதிராக நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் உருவப்படங்கள் எரிக்கப்படுவதற்கு என்ன காரணம்? என்று பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாட்டாளர் சசி மகேந்திரனிடம் பி.பி.சி. தமிழோசை கேள்வி எழுப்பிய போது;

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழர்களின் உரிமைகள் பற்றியும் தமிழ் தேசத்தின் விடுதலை பற்றியும் தேர்தல் மேடைகளில் கோசங்களை எழுப்பி மக்களது வாக்குகளை எடுத்துவிட்டு இன்று எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்று சசி மகேந்திரன் தெரிவித்திருந்தார். குறிப்பாக, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா. சம்பந்தன் ஆகியோரின் அண்மைக்கால செயற்பாடுகள் திருப்தியளிக்கும் விதத்தில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்குள் உடைவுகளை ஏற்படுத்த முன்னைய அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் முடியவில்லை.

அதற்கு காரணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தால் தமிழ் மக்கள் தங்களை புறக்கணிப்பார்கள் என்பது கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும். ஏற்கனவே கட்சியிலிருந்து தனித்துப் போனவர்களை மக்கள் நிராகரித்ததும், அவர்கள் திரும்பி வந்து இணைந்ததும் அவர்களுக்கு ஆதரவளித்ததும் தெரிந்ததே.

தமிழ் மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு ஏன் இவ்வாறு ஆதரவளிக்கின்றார்கள் என்ற கேள்விக்கு விடை தேடுவது கடினமானதல்ல. தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாகவிருந்தது. ஆயுத இயக்கங்கள் பல தனித்தனியாக இயங்கிய காலத்தில் அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து போராட முன்வர வேண்டும் என தமிழ் மக்கள் விரும்பினார்கள்.

எனவே, ஒற்றுமைக்கான ஆதரவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கான தமிழ் மக்களின் ஆதரவு. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து யாரும் பிரிந்து செல்ல முற்பட்டால் அது அரசியல் தற்கொலைக்கு சமனானது என்பது அவர்களுக்கு புரியும்.

ஆனால், இவ்வளவு காலத்தின் பின்னர் - இப்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் தலைமை மாற்றம் ஒன்றை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான உந்தல்கள் புலம்பெயர் தளத்திலிருந்தும் நடைபெறுவதாகத் தெரிகின்றது. எனவே, சம்பந்தனின் இடத்திற்கு விக்னேஸ்வரன் வரப் போகின்றாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


- விஸ்வா கட்டுரையிலிருந்து.




தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசனின் பவளவிழா அண்மையில் யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரியில் சிறப்புற இடம்பெற்றபோது...

# கடற்றொழிலாளர்கள் தொழிலை தக்கவைப்பது சவாலாகவுள்ளது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

பூநகரிகடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதாரஉதவிகள் கிடைக்கப்பெற்றாலும் அதனைப் பயன்படுத்தித்தொழிலில் ஈடுபடுவதில் அவர்கள் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றனர். என நாடாளுமன்றஉறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பூநகரிப்பிரதேச விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் உரையாற்றுகையில்,

இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பால் சிறுதொழில் உபகரணங்களைப்பயன்படுத்திதொழில் புரியும் மீள்குடியமர்ந்ததொழிலாளர்கள் இன்று முற்றாக தமது தொழிலை இழந்துள்ளனர், அவர்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் இதனைத தட்டிக்கேட்பதற்குஅரசியல் தரப்புக்கள் தயங்குகின்றன, தமது அரசியல் இலாபநோக்கத்திற்காக கடற்றொழிலாளர்களைப் பலியாக்கிக் கொண்டிருக்கின்றாரகள். அதுமட்டுமன்றிசட்டத்திற்கு புறம்பானதொழில் முறைகள்ான அனுமதியின்றி கடற்கரைகளை ஆக்கிரமித்தல் இரும்புக்கம்பங்களை பயன்படுத்தி மீன்நகர்வுகளைத் தடுத்தல் மற்றும் டைனமெற் பாவனைஎன்பவற்றால் பூநகரிப்பிரதேசதொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுவருகின்றனர் என தெரிவிக்கப்பட்டது,ஆகவே இவ்வாறான நிலைமைகளில் மாற்றம். ஏற்படவேண்டும் எமதுதொழிலாளர்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் தமதுகடற் பிரதேசங்களில் தொழிலில் ஈடுபடுவதற்கு வழி வகுக்கப்படவேண்டும். கடற்றொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் பலியிடப்படுவதை வன்மையாக கண்டிக்கின்றோம். இதற்காக குரல் கொடுக்கத் தயங்கும் அரசியல் தரப்புக்களின் சுயநலப்போக்கு வருந்தத்தக்கதாகும். மிகச் சிறந்தவிளையாட்டு அணிகளை கிளிநொச்சிமாவட்ட விளையாட்டுக்கழகங்கள் கொணடிருக்கின்றன. எனவேஅந்தக்கழகங்களை வளர்தெடுப்பதனூடாக எதிர்காலத்தில் விளையாட்டுத்துறையிலும் முன்னணியில் திகழும் மாவட்டமாக கிளிநொச்சி மாவடடத்தைமாற்றிஅமைக்கமுடியும் அந்த இலக்கைக் கொண்டே நாம பலவிளையாட்டுக்கழகங்களின் வளர்ச்சிக்கு நிதியுதவிகளையும் ஏனைய பங்களிப்புகளையும் வழங்கிவருகின்றோம் என்றார்.

பூநகரிப்பிரதேச சபைஉறுப்பினர் இராசலிங்கம் கிளிநொச்சி மாவட்ட காலபந்தாட்டலீக்கின் உப தலைவர் அன்ரன் அன்பழகன் மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தலைவர் பிரான்சிஸ் மற்றும் பூநகரிப்பிரதேச உதைப்பந்தாட்டலீக்கின் தலைவர் ராஜ்குமார் ஆகியோரும் விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# ஆக்கம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார பேரவை மற்றும் பிரதேச செயலகம் என்பன இணைந்து வெளியிடவுள்ள கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை அனுப்புவோர் இதுவரை பிரசுரமாகாத தமது சொந்தப் படைப்பான நெடுந்தீவு பிரதேசம் சார்ந்த அதனைப் பிரதிபலிக்கக் கூடியதான கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள், செய்தித்துளிகள், விடுகதைகள், குறுங்கவிதைகள் போன்ற ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# கவிதைத்தொகுப்பு அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் குமாரசாமி செல்வக்குமாரின் 'ஊசல்' கவிதை தொகுப்பு அறிமுகவிழா வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி. நா.ஐங்கரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வித்தியாசாகரம் மாநகசாதனையாளர் சிவஸ்ரீ.சுபா வாசுதேவக்குருக்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் கவிஞர் கு.செல்வக்குமாருக்கு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் சார்பில் 'ஊடக செம்மல்' எனும் பட்டமும் ஞானரத்தினம் எனும் கௌரவவிருதும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினரும் வடக்கு மாகாணவிளையாட்டுத்துறை இணைப்பதிகாரியுமான இமானுவேல் ஆனல்ட் தவிசாளர் திருமதி நா.ஐங்கரனும் இணைந்து கவிஞர் கு.செல்வக்குமாருக்கு கவிக்கேணி எனும் உயர் விருதினை வழங்கி கௌரவித்தனர். (92)

# வலி.வடக்கு பிரதேச சபையின் வீதிகளை புனரமைக்க நிதிஒதுக்கீடு

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழுள்ள வீதிகளை புனரமைப்பதற்காக பிரதேச சபையின் 2015ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவித்தார்.

அளவெட்டி மத்திய பள்ளியாலத்தை வீதி, அளவெட்டி கிழக்கு சீனட்டிப்பாய் வீதி, மம்மலை காட்டுப்புல இணைப்பு வீதி, மல்லாகம் காளி கோவில் இணைப்பு வீதி,அளவெட்டி மல்லாகம் முதலாம் குறுக்கு வீதி. மாவிட்டபுரம் வீணியலரை அம்மன் கோவிலடி வீதி, இளவாலை பத்தாவத்தை தேவாலய வீதி தெல்லிப்பளை சைவப்பிரகாச வீதி, இளவாலை கிறேசர் முன்வீதி, வித்தகபுரம் குருநாதர் சுவாமி வீதி, குரும்பசிட்டி தேவசூரியர் வீதி என்பன இந்த வருடம் புனரமைக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

வரவு - செலவுத்திட்ட நிதிக்கு மேலதிகமாக 55 இலட்சம் ரூபா செலவில் அளவெட்டி மகாத்மா காந்தி வீதியும் 2 மில்லியன் ரூபாய் செலவில் கூவில் வலித்துாண்டல் இணைப்பு வீதியும் புனரமைப்புச் செய்யப் படவுள்ளது. 'புறநெகும' திட்டத்தின் ஊடாக 8 மில்லியன் ரூபா செலவில் மடத்தடி வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது என்று தவிசாளர் மேலும் கூறினார். (63)

## முரசின் இன்றைய பலன்

(15.03.2015 ஞாயிற்றுக்கிழமை

ஐய வருஷம் பங்குனி மாதம் 01 ஆம் திகதி.
திதி தசமி - சித்தாமிர்தயோகம்
பூராடநட்சத்திரம் மு.இரவு 7.54வரை பின் உத்தராடம்
இராகுகாலம் 4.51 - 6.21 வரை சுபநேரம் 9.21-10.51 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: டெங்கு ஒழிப்பில் குடும்ப சகிதம் சுற்றாடலைச் சுத்தம் செய்தல்.

**ரிஷபம்**: விரும்பாத வாழ்க்கையை கட்டாயப்படுத்த பெற்றோர் வற்வற்புறுத்தல்.

**மிதுனம்**: மழலைக்கு நாமகரணம் சூட்டுவதில் பெற்றோருக்குள் ரகளை ஏற்படல்.

**கடகம்**: போதைவஸ்த்துப்பாவனை கண்டு பிடிக்கப்பட்டு நீதிமன்று முன்நிறுத்தல்

**சிம்மம்**: காலாவதியான பொருட்களை கட்டியடிக்க முயல்வது பற்றி விழிப்பாக இருக்கவும்.

**மீனம்**: பிரமுகரின் சிபார்சினால் கௌரவப்பதவி ஏற்படலாம்.

**கன்னி**: வியாழசுகம் நன்கு இருப்பதினால் மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க விரும்புதல்.

**கும்பம்**: பிதாவின் தேகநலம் எதிர் பாராது பாதிக்கப்படலாம்.

**மகரம்**: வெற்றுக் காசோலையில் கையொப்பம் இட்டு வைக்கவேணடாம்.

**தனுசு**: நிலுவை கூடியதால் தொலைத் தொடர்புமின்சார பாவனை அற்றுவிடல்.

**விருச்சிகம்**: சரியாகக்கணக்கிட்டு பணத்தினை பெறுவதைக் கை விட வேண்டும்.

**துலாம்**: வாஸ்து முறைப்படி புதிய மனை அமைக்க ஜோதிடரை நாடுதல்

# ஒரு கவிஞனின் எழுத்தாற்றல் இனவிடுதலையை பெற்றுக்கொடுக்கும்

## சபா வாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

கவிஞன் ஓர் எழுத்தியல் போராளியாவான் அவனால் ஓர் இனத்திற்கு விடுதலை கூட பெற்றுக் கொடுத்துவிட முடியும் திரிவுபடாத வரலாற்றினை தருபவனும் கவிஞன் தான்.

இவ்வாறு பிரதம அதிதியாக கலந்து கொண்ட வித்தியாசாகரம் மாநகரவிருதுசாதனையாளர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தெரிவித்தார்.

கவிக்கோர் குமாரசாமி செல்வக்குமாரின் 'ஊசல' கவிதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா வலி. மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட பிரதமவிருந்தினர் சிவஸ்ரீ.சபா வாசுதேவக்குருக்கள் மேலும் பேசுகையில், தமிழ் கவிதைகள் நீண்ட வரலாற்று பாரம்பரியம் உடையவை. தொல்காப்பியம் முதல் தமிழ் கவிதைகளும் எண்ணில் அடங்காத இலக்கிய பரம்பலை கொண்டதாகும்.

எனது சிந்தனையில் அன்பினையும் பக்தியையும் மக்களை ஆற்றுப்படுத்தக்கூடிய ஓர் சாதனமாக கவிதையை காணுகின்றேன்.

கவிஞன் என்பவன் ஓர் எழுத்தியல் போராளியாவான் அவனால் ஓர் இனத்திற்கு விடுதலையை கூட பெற்றுக்கொடுத்துவிடமுடியும்.



அந்த வகையில் கவிக்கோர் செல்வக்குமார் ஓர் ஊடக மற்றும் கவி போராளியாவார்.

ஒருவரது திறமைகளும் சாதனைகளும் அவருக்கு மாத்திரமல்லாது அவரது பெற்றோருக்கும் உடன் பிறந்தோருக்கும் சுற்றத்தாருக்கும் பெருமையை தரும் என்றார்.

இந்நிகழ்வில் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் 'ஊடக செம்மல்' என்ற பட்டத தினையும், ஞானரத்தினம் என்ற உயர் விருதினையும் வழங்கிக் கௌரவித்தார்.

வலி. மேற்கு தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் 'கவிக்கேசரி' எனும் உயரிய விருதினை கவிஞர் கு.செல்வக்குமாருக்கு வழங்கிக்கௌரவித்தார்.

(92)

# சிறந்த கால்நடைப்பண்ணையாளரான சபேசனுக்கு பொது அமைப்புக்கள் பாராட்டு

வலி.மேற்கின் சிறந்த கால்நடைப்பண்ணையாளரான சண்முகலிங்கம் சபேசனை அராலி பொது அமைப்புக்கள் பாராட்டியுள்ளதுடன் பாராட்டு பத்திரம் ஒன்றினையும் வழங்கி கௌரவித்துள்ளது.

கால்நடைகளான ஆடு,மாடு மற்றும் கோழிகளை சிறந்த முறையில் பண்ணை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தி வடமாகாணத்தின் இதரபகுதிகளுக்கும், பொது அமைப்புக்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வழங்கும் சிறந்த பண்ணையாளராக செயற்படுகின்றார்.

அராலி கிழக்கு அம்மன்கோவிலடியில் பிரதான பண்ணைகளையும், ஏனைய தீவக பிரதேசங்களில் இணைப்பு பண்ணை நிகழ்ச்சித் திட்டங்களையும் சிறந்த முறையில் நுகர்வோருக்கு வழங்கி வருகின்றார். கடந்த மாதம் மட்டும் 23 பசுமாடுகளை சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளார்.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தியே பண்ணை வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

இதேவேளை வலி. மேற்கு பிரதேசத்தில் சமூக சேவையில் ஈடுபடுவதுடன் வறியமக்களுக்கும் தன்னாலான உதவிகளை மேற்கொண்டுவரும் இவரது பன்முக சேவையை பாராட்டியே அராலி பொது அமைப்புக்கள் ஒன்று கூடி சண்முகலிங்கம் சபேசனை பாராட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(92)

# வரதராஜப் பெருமாள்கோவில் புனருத்தாரண பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலின் புனருத்தாரண வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

உள் மண்டபத்தின் வடக்கு, தெற்கு மேற்குப்புற வேலைகள் முடிவுற்று தற்போது கிழக்குப் பக்க மண்டபம் உடைக்கப்பட்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சகல வேலைகளும் முடிவடைந்து பாலஸ் தானம் செய்து நிறைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. புனருத்தாரண வேலைகள் முடிவடைவதற்கு இரண்டு வருடங்கள் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கோவிலின திருத்த வேலைகளுக்கு சுமார் ஐந்து கோடி ரூபா பணம் செலவாகலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பெருமாள் அடியார்களிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு வருகிறது. இதற்காக ரூபா 5000, 2000, 1000, 500 மதிப்புள்ள பற்றுச்சீட்டுகள் அடிக்கப்பட்டுள்ளன.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில் 18ஆம் 'நூற்றாண்டுவரை சிறிய கோவிலாகவே காணப்பட்டது. கி.பி. 1820 ஆம் ஆண்டு இதன் கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

1835 ஆம் ஆண்டு பலர் தமது காணிகளை பெருமாள் கோவிலுக்கு வழங்கினர். கி.பி. 1878ஆம் ஆண்டு இக்கோவிலில் பிரமோற் சவம் ஆரம்பிக்கப்பட்டது.

(137)



யாழ். தீவக கல்வி வலய ஆங்கில தினமும் 2014 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் யா/வேலணை மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் -அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற போது..

# பதிவிருக்கப் பெட்டகம்

ஒரு குருவைப் பிரசங்கம் செய்ய அழைத்திருந்தார்கள். அவரை அழைத்து வர குதிரைக்காரன் ஒருவன் போயிருந்தான். அன்று பலத்த மழை. பிரசங்கத்தைக் கேட்க ஒருவரும் இல்லை.

"என்னப்பா, பிரசங்கத்தைக் கேட்க உன் ஒருவனைத் தவிர யாருமே இல்லையே... என்ன செய்யலாம்?" என்று கேட்டார் குரு.

"அய்யா நான் அதிகம் படிக்காதவன். நான் 30 குதிரைகளை வளர்க்கிறேன் அய்யா. நான் குதிரைக்குப் புல் வைக்கப் போகும்போது எல்லாக் குதிரையும் வெளியே போயிருந்தாலும், ஒரே ஒரு குதிரை மட்டும்தான் இருந்தாலும், அந்த ஒன்றுக்கு மட்டும் புல் வைச்சிடுவேன்" என்றான்.

உடனே குரு கொஞ்சம்கூட யோசிக்காமல் பிரசங்கத்தை ஆரம்பித்தார். பாவம், புண்ணியம், மந்திரம், தந்திரம், துவைதம், அத்வைதம் என்று நிறைய விஷயங்களைப் பிரசங்கம் செய்துவிட்டு... குதிரைக்காரனிடம் கேட்டார்:

"என் பிரசங்கம் எப்படி இருந்துதப்பா?"

குதிரைக்காரன் சொன்னான்:

"அய்யா நான் குதிரைக்குப் புல் வைக்கும்போது ஒரு குதிரைக்கு வேண்டிய புல்லை மட்டும்தான் வைப்பேன். 30 குதிரைக்கு வைக்க வேண்டிய புல்லை ஒரு குதிரைக்கு வைக்கவே மாட்டேன்".

*** *** *** ***

தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஒரு கூட்டத்தில் பேசும்போது சொல்லியது: "நான் ஒரு திருமணத்தை நடத்தி வைத்தேன். மூன்று மாதங்கள் கழித்து அந்த மாப்பிள்ளையிடமிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதில் தன் மனைவி தன்னை மதிப்பதில்லை என்றும், மிகவும் அதிகாரத் தோரணையில் நடந்து கொள்வதாகவும், தன்னால் அவளோடு ஒத்துப்போக முடியவில்லை என்றும், தக்க அறிவுரை தர வேண்டும் என்றும் எழுதிக் கேட்டிருந்தார்.

நான் உடனே எட்டு எழுத்துக்கள் கொண்ட ஓர் அறிவுரையை அவருக்கு எழுதி அனுப்பினேன். அவர் அந்த அறிவுரை வேலை செய்யவில்லை என்று பதில் எழுதி அனுப்பினார். நான் உடனே ஏழு எழுத்துக்கள் அடங்கிய ஓர் அறிவுரையை எழுதி அனுப்பினேன். அதுவும் பயனில்லை என்று அவர் மறுமொழி எழுதி அனுப்பினார். சரி, கடைசியாக ஆறு எழுத்துக்கள் அடங்கிய ஓர் அறிவுரையை எழுதி அனுப்பினேன். "ஆஹா... அது பிரமாதமான அறிவுரை அய்யா... இப்போது அதைத்தான் கடைப்பிடித்து வருகிறேன். இப்போது எங்களிடையே எந்தப் பிரச்சினையுமில்லை" என்று மகிழ்ச்சியாக அந்த மாப்பிள்ளை பதில் அனுப்பியிருந்தார். "இந்த இடத்தில் சற்று நிறுத்திவிட்டுப் பின்பு நான் சொன்ன அறிவுரைகள் என்னென்ன தெரியுமா? எட்டு எழுத்து அறிவுரை "அரவணைத்துப் போ' ஏழு எழுத்து அறிவுரை "அடக்கிப் பார்' இந்த இரண்டும் பயன்படவில்லை. மூன்றாவதாய் அனுப்பிய ஆறு எழுத்து அறிவுரை "அடங்கிப் போ!' இதுதான் பிரச்சினையைத் தீர்த்த அறிவுரை" என்றார்.

அரங்கில் கரவொலி அடங்க வெகு நேரமானது!

*** *** *** ***

கிருபானந்த வாரியார் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போது சிவனின் அருமை பெருமைகளை கூறி வந்தார்.

திடீரென்று, ஒரு சிறுவனை பார்த்து, "முருகனின் அப்பா பெயர் என்ன?" என்று கேள்வி கேட்டார்.

அந்த சிறுவன் சற்றும் தயங்காமல், "சிவாஜி" என்று பதில் கூறினான்.

வாரியார் எந்தவித அதிர்ச்சியையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், சமயத்திற்கு ஏற்றது போல், "பையன் கூறுவது சரி தான்" என்றார்.

இதைக்கேட்டு கூட்டத்தினரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதை புரிந்து கொண்ட வாரியார், "பெரியவர்களை நாம் காந்திஜி, நேருஜி என்று மரியாதையுடன் அழைப்பது இல்லையா? அது மாதிரி தான் அந்த பையன் சிவனை "சிவாஜி" என்று மரியாதையுடன் அழைத்து இருக்கிறான்" என்று கூறவும், கூட்டத்தினர் மீண்டும் சிரிப்பலையில் ஆழ்ந்தனர்.

# விசாரணைகள் தாமதமானால் குற்றங்கள் வலுவடையும்

## சுட்டிக்காட்டுகிறது மக்கள் விடுதலை முன்னணி

ජනතා විමුක්ති පෙරමුණ
மக்கள் விடுதலை முன்னணி
PEOPLE'S LIBERATION FRONT

(கொழும்பு)

விசாரணைகள் தாமதிக்கப்படுவதனால் ஊழலில் ஈடுபடுபவர்கள் வலுவடைவதாக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர், சமந்த வித்யாரத்ன, 100 நாட்கள் திட்டத்தில் 63 நாட்கள் கடந்துள்ள போதிலும் ஊழலில் ஈடுபட்ட ஒருவரையேனும் அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கு சுயாதீனமாக செயற்படுவதற்கான வாய்ப்பு தற்போது காணப்படுகின்றது.

எனினும், அரசியலமைப்பில் சுயாதீன ஆணைக்குழுவை அமைக்கும் பட்சத்தில், அவர்கள் மேலும் சுயாதீனமாக செயற்படுவதற்கு தேவையான சட்ட ரீதியான பாதுகாப்பு காணப்படும். பொலிஸாரை சேவையில் இணைப்பது, பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் ஆகியன அரசியல்வாதிகள் ஊடாகவே தற்போதும் வழங்கப்படுகின்றன. முழு பொலிஸ் சேவையும் அரசியலுக்குள் மூழ்கியுள்ளது.

இதுவே இந்த நாட்டின் சட்டம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணமாகும் என குறிப்பிட்டார்.

# முறிகள் விநியோகத்தில் முறைகேடு புதிய குழு நியமிக்க வேண்டும்

## இலங்கை வணிக சபையின் முன்னாள் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முறிகள் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமரினால் நியமிக்கப்பட்ட குழு உடனடியாக மாற்றப்பட்டு, வேறொரு குழு நியமிக்கப்பட வேண்டும் என இலங்கை வணிக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிறந்த நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த சிலர் முயற்சிகளை மேற்கொள்வதாகவும், மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் ஜனாதிபதிக்கு கடிதமொன்றின் மூலம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது நல்லாட்சியா என சிலர் கேள்வி எழுப்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சட்ட நடவடிக்கைக்காக குற்றப் பத்திரிகை தயாரித்தல், உடன்படிக்கைகளை ஆராய்தல், சட்டத்தை வகுக்கின்றமையை தெளிவுபடுத்திக் கொள்ளல் என்பனவும் இந்தக் குழுவின் கடமையாக காணப்படுகின்றது.

குற்றம் மற்றும் சிவில் வழக்கிற்காக ஆஜராகின்ற சட்டத்தரணிகளின் வங்கி, நிதி நடவடிக்கைகள், பொருளாதார நிலை, மக்கள் நிதி முகாமைத்துவம், முறிகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் மாத்திரமன்றி, அது குறித்தும தெளிவில்லாதுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்காக வங்கிகளிலிருந்து ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரிகள், வணிக வங்கி நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட முகாமையாளர்கள், கணக்காய்வாளர்களை நியமிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கு கிழக்கு மக்களை தவறாக கணித்துவிட்டேன்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறித்து தாம தவறாக கணித்துவிட்டதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 80 சதவீதமான வாக்குகள் தமக்கு எதிராக பயன்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் இது இவ்வாறு நிகழும் என்று தாம் எதிர்பார்த்திருக்கவில்லை.ஏன் இப்படி வாக்குகள் வீழ்ச்சி அடைந்தன என்பது தமக்கு புரியவில்லை.

மேலும் வடக்கு கிழக்கின் வாக்குகள் சரிவடைந்துள்ளது என்பது தெரிந்ததோடு, தாம் தேர்தலில் தோல்வி அடையப் போகிறோம் என்பதையும் உணர்ந்துக் கொண்டதாக மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# வெடிபொருள் வெடித்து மாணவர் காயம்

(கொழும்பு)

மாவனெல்ல - கிழக்கு புதிய நகரில் பாடசாலை மாணவர் ஒருவரின் பையில் இருந்த வெடி பொருள் ஒன்று வெடித்ததில், குறித்த மாணவர் காயமடைந்துள்ளார்.

தமது பையில் இருந்த குடிநீர் போத்தலை வெளியில் எடுக்கும் போது குறித்த வெடி பொருளை அவர் அவதானித்துள்ளார். அதனை வெளியில் வீச முற்படும் போது, அது வெடித்ததாக கூறப்படுகிறது.

அவரது பையில் எவ்வாறு இந்த வெடி பொருள் வந்தது என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடாத்துகின்றனர்.

# இலங்கை இந்திய உறவு நாணயத்தின் இருபக்கங்கள்

## நாடாளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இந்தியாவும் இலங்கையும் நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன. மொழி கலாசாரம், சட்டம், நாடாளுமன்ற முறை, கிரிக்கெட் ஊடாக இருநாடுகளும இணைந்துள்ளன. என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்திம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமரின் நாடாளுமன்ற உரையை தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

வெஸ்ட் மினிஸ்ட் முறை அமுல்படுத்தப்பட்ட நீண்ட வரலாறு எமக்கிருக்கிறது. மீண்டும் வெஸ்ட்மினிஸ்டர் முறையை அமுல்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகிறோம்.

பழமை வாய்ந்த ஜனநாயக முறை இலங்கையில் காணப்படுகிறது. 1835இல் அரசியலமைப்பு சபை இருந்தது. இந்தியாவுக்கும் எமக்கும் மொழி, கலாசாரம் என்பவற்றுக்கிடையில் நெருக்கம் காணப்படுகிறது. மன்னர் ஆட்சிக்காலம் முதல் பல்வேறு தொடர்புகள் இருந்து வருகிறது.

நாமும் இந்த வரலாற்றில் பங்காளராக இருக்கிறோம்.



மொழி கலாசாரம், சட்டம், நாடாளுமன்ற முறை, கிரிக்கெட் ஊடாக இருநாடுகளும் இணைந்துள்ளன.

இரு நாடுகளும் நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன. எமது மக்களுக்கு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வழங்குவதே எமது நோக்கமாக உள்ளது எனவும் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

---

### தினமுரசுக்கு வந்த கடிதம்

தினமுரசு

# வடக்கு அதிகாரிகள் இடமாற்றம் நல்லாட்சிக்கு நிச்சயம் வழிவகுக்கும்

## அரச நிர்வாகத்தை வலுப்படுத்த இடமாற்றம் மேலும் துரிதப்படுத்தப்படுமா?

அரசாங்க அதிபர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகம் வாயிலாக பார்வையிட்டுள் ளேன். இது அபிவிருத்தியின் முதற்படி.

இடமாற்றம் என்பது அரசாங்க நிறுவனங்களில் கடமை யாற்றும் அலுவலர்களுக்கு (TOP TO BOTTOM) 5 வரு டங்களுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்பது தாபன விதிக்கோவையில் உள்ள (AR) கட்டாய நிபந்தனையாகும்.

இடமாற்றம், பதவி குறைப்பு, பதவியேற்றம், பதவி இரத்து செய்தல், பழிவாங்குதல் என்பன வடமாகாணத்தில் இன்று புனரயோழிப்போயுள்ளன.

அரசாங்க அதிபர்களுக்கு (GOVT. AGENTS) மட்டும் இடமாற்றம் இடம்பெறுவது நல்லாட்சி தந்துவமாக இருக்காது.

முறையான நல்லாட்சி தத்துவம் என்பது கீழ் வரும் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டு அரச நிர்வாகத்தை தூய்மையானதாக மாற்றினால் மட்டுமே மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்திகளும அபிவிருத்தி திட்டங்களும் நலமாக முன்னேற்றம் அடையும்.

இந்தவகையில் வடக்கில் மேலதிக அரசாங்க அதிபர்கள், வடக்கின் பிரதி பிரதம செயலாளர்கள் (DCS), அமைச்சுக்களின் செயலாளர், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர், சகல நிர்வாக தரத்தில் உள்ள நிர்வாக அலுவலர்கள், வடக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், பிரதேச செயலாளர் கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவி பிரதேச செய லாளர் கள், பிரதேச மற்றும் நகரசபைகளின் செயலாளர் கள், அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் என பல மட்டத்தினரையும் இடமாற்றம் செய்வதன் மூலம் மக்களுக்கு மக்கள் எதிர் பார்கின்ற சேவை இடம்பெறும்.

வடக்கில் ஆளுநரையும், பிரதம செயலாளரையும் இட மாற்றியதன் ஊடாக புதிய ஆளுநரும், புதிய பிரதம செயலா ளரும் வடக்கின் புதிய நிர்வாக அலகுப் பொறுப்பாட்சியை வடமாகாண முதல்வர் க.வி.விக்கினேஸ்வரனுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கின்றனர்.

எனினும் வடக்கில் இடமாற்றங்கள், புதிய பதவியணிகள், திறமையானவர்களுக்கு பதவி வழங்கல் என்பன யாவும் மந்தகதியில் இடம்பெறுவதாக வடமாகாண சபை உறுப்பினர் கள் முதல்வருக்கும் வடக்கு ஆளுநருக்கும் பிரதம செயலாளருக்கும் எழுத்து மூலம் அறிக்கையிட்டுள்ளனர்.

எனவே வடக்கில் தற்போது உயர் மட்டத்தில் உள்ள அலுவலர்கள், அதிகாரிகள் மக்களுக்கு முழு நல நன்மை செய்ய வேண்டுமானால் அரசாங்க அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது போன்று சகல தரப்பு அலுவலர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

இன்று வடக்கில் நடப்பது என்ன ஒவ்வொரு உயர் மட்ட பதவி அணியினரும் பதவிகளை தக்க வைப்பதும் அதில் இருந்து ஏதாவது ஈட்ட வேண்டும் என்ற எண்ணத்திலுமே உள்ளனர்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சியில் இடம்பெற்ற நிதி மோசடி, லஞ்சம், ஊழல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சபை உறுப்பினர் என்ற வகையில் நாம் தெரிவித்த போதும் இதுவரை எதுவும் இடம்பெறவில்லை.


எனவே நல்லாட்சி இடம்பெற முதலில் இடமாற்றத்தையாவது செய்து பின்னர் விசாரணை மேற்கொண்டால் மட்டுமே இந்த வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்பார்க்கும் சேவை இடம்பெறும்.

இல்லாவிழல் பழையகுருழ கதவை திறவழ என்ற நிலையை ஏற்படும்.

நன்றி.

முன்னாள் பா.உ.
வடமாகாணம்.

23.



இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
(01).14 (2).13
(03).16 (4).15

(08).24, 25 ஆகிய வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்குவரிசை மாற்றப்பட்டு A,B,C,D,E எனத்தரப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்குவரிசை இடம்பெறும் விடையினைத் தெரிவு செய்க

24. ஒருபிள்ளை புலமைப்பரிசில் எழுதும் செயற்பாடு
A - விடைகளை எழுதுகின்றது
B - வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்கின்றது
C - இருக்கையில் அமருகின்றது
D - அனுமதி அட்டையில் கையொப்பமிடுகின்றது
E - வினாக்களை வாசிக்கின்றது

(01). CDEBA (02). CEBAD (03). ADBCE (04). CDBEA

25. சீருடை தைக்கும் செயற்பாடு
A - அளவு எடுத்தல்
B - துணியை வெட்டுதல்
C - துணியைத்தைத்தல்
D - அளவுகளைத் துணியிலே குறித்தல்
E - சீருடை கிடைத்தல்

(01). ABCDE (02). EADCB (03). ADBCE (04). ADBEC

(09).26,27வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

26. முதலெழுத்துப் பாதத்தில் உண்டு சாதத்தில் இல்லை
இரண்டாம் எழுத்து சதத்தில் உண்டு பதத்தில் இல்லை
மூன்றாம் எழுத்து கம்பில் உண்டு கப்பில் இல்லை

..........................................................................

27. முதலெழுத்து மானத்தில் உண்டு கானகத்தில் இல்லை
இரண்டாம் எழுத்து வீட்டில் உண்டு. நீட்டில் இல்லை
மூன்றாம் எழுத்து தாரத்தில் உண்டு தானத்தில் இல்லை
நான்காம் எழுத்து சார்க்கில் உண்டு. சாக்கில் இல்லை

..........................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. வாசிப்பதனால் 2. புத்தகங்கள் / நூல்கள் 3. அரசு (02). 4. தீயன 5. நண்பர்கள் (03). 6. நிறைவு 7. ஒவ்வொருநாளும் 8. நன்மை + குணம் 9. நாம் 10. குடி 11. நல்ல 12. பூரணமடைவான் (04). 13. எதனையும் உரிய நேரத்தில் செய்யாவிட்டால் வீணாகிப்போகும் 14. நடந்து முடிந்ததை நினைப்பதால் பயனில்லை (05). 15. பாலகன் 16. பணக்காரன் 17. இயற்கைவனப்பு 18. பழத்தோட்டம் (06). 19. கவிஞர் பரிசு பெற்றார் (07). 20. விகடகவி 21. காட்டு மலர்கள் ஆற்றின் இருபக்கங்களையும் அழகு செய்தன 22. market 23. உங்களுக்கு எத்தனை சகோதரிகள்? 24. அம்மாவீட்டுக்கு வருகிறார் 25. விதுஹல்பதி காரியாலய கொஹெத? (08). 26.4 27.2 28.3 29.3 30.1 31.3 32.1 33.3 34.1 35.1 36.4 37.2 38.3 39.2 40.3 41.1. அரிவிவெட்டுவோர் 2. மேசன் 3. தச்சுவேலை செய்வோர் 4. வாகனம் திருத்துவோர் 42.1. நேரேசெல் 2. முன்னால் சிறுவர் கடவை 43.1. காற்று 2. நீர் 3. விலங்கு (09). 44. 12மாணவர்கள் 45. அப்பம் 46. அப்பம் 47. சோறு, புட்டு, தோசை 48. 20பேர் 49. $12cm^2$ 50. 135 51. 5நிமிடங்கள் 52. 78தேங்காய்கள்

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்




# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01).1,2 ஆகிய வினாக்களில் நான்கு அடைப்புக்களில் மூன்று உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பிலுள்ள இரு உருக்களுக்குமிடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க

01.



(1) (2) (3) (4)

02.




(1) (2) (3) (4)

03. பின்வருவனவற்றில் சிறு குழந்தையின் உள்ளத்தினை விபரிக்கும் கூற்று எது?
(01). பழிவாங்கும் தன்மை கொண்டது (02). கல் நெஞ்சம் கொண்டது
(03). அன்பு அற்றது (04). கள்ளங்கபடமற்றது

04. கணவனும் மனைவியும் இணைபிரியாது சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு உகந்த உவமானமாக அமைவது எது?
(01). நகமும் சதையும் போல (02). ஓடும் புளியம்பழமும் போல
(03). தாமரை இலைத்தண்ணீர் போல (04). அல்லும் பகலும் போல

05. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" என்பதனை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க
(01). சுவரில் எறியும் பந்து திரும்பி வருதல்
(02). பழங்கள் கீழே விழுதல்
(03). கப்பல் செல்லுதல்
(04). காற்றில் பறத்தல்




(02) குறித்த ஒரு நகரில் கோயில், நூல்நிலையம், பூங்கா, மிருகக்காட்சிசாலை ஆகியன அமைந்துள்ள விதமும் அவற்றினை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன. அத்தகவல்களுக்கு ஏற்ப 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக

06. எந்த ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால் ஏனைய இடங்களிற்குக் குறைந்த அளவு தூரத்தில் செல்ல முடியும்?
(01).பூங்கா (02).நூல் நிலையம் (03).கோயில் (04).மிருகக்காட்சிசாலை

07. ஒருவர் நூல் நிலையத்திலிருந்து பூங்காவிற்குச் சென்று பின்னர் அங்கிருந்து மிருகக்காட்சிசாலைக்கு சென்று பின்னர் அங்கிருந்து நூல்நிலையத்தினூடாக கோயிலுக்குச் சென்றால் அவர் பயணம் செய்த மொத்தத்தூரம் எவ்வளவு?
(01).210m (02).1500m (03).1000m (04).2100m

08. ஒரு மோட்டார் வண்டி 70ஆவது கிலோமீற்றர்க்கல்லில் இருந்து 80ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்கு 10 நிமிடங்கள் எடுத்தன. மோட்டார் வண்டி அதே கதியில் சென்றால் 140ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்
(01).60நிமிடம் (02).55நிமிடம் (03).25நிமிடம் (04).70நிமிடம்

09. 4kg கௌபியின் விலை = 2kg சீனியின் விலை
4kg சீனியின் விலை = 1kg கடலையின் விலை
எனின், பின்வரும் அட்டவணைக்கேற்ப கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

| தர்சன் | அஜித் | முபாரக் | கிறிஸ்ரி |
|---|---|---|---|
| 6kg கௌப்பி<br>2kg சீனி<br>1kg கடலை | 4kg கௌப்பி<br>3kg சீனி<br>1kg கடலை | 2kg கௌப்பி<br>2kg சீனி<br>2kg கடலை | 1kg கௌப்பி<br>3kg சீனி<br>2kg கடலை |

(01).தர்சன் (02).அஜித் (03).முபாரக் (04).கிறிஸ்ரி

10. ஒரு நகரத்தில் கோயில் பள்ளிவாசலிலிருந்து 70m கிழக்கேயும், தேவாலயம் பள்ளிவாசலிலிருந்து 90m வடக்கேயும், விகாரை தேவாலயத்திலிருந்து 70m கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்ப விகாரை இருப்பது கோயிலிலிருந்து
(01).90m வடக்கே (02).70m வடக்கே (03).90m கிழக்கே (04).70m கிழக்கே

11. காவியா விஜயின் மகளாவார். ரமணன் விஜயின் அண்ணா ஆவார். ராஜி விஜயின் சகோதரி ஆவார். காவியன் ராஜியின் மகனாவார். காவியாவுக்குக் காவியன் என்ன உறவு முறை?
(01).தம்பி (02).மைத்துனன் (03).அண்ணா (04).மாமா

(03) புகையிரத நிலையங்களிலிருந்து புகையிரதங்கள் புறப்பட உள்ள நேரம் பற்றிய விபரம் கீழ் காணப்படுகிறது

| புறப்பட்ட இடம் | புறப்படவுள்ள நேரம் மு.ப | புறப்படவுள்ள நேரம் பி.ப | குறிப்பு |
|---|---|---|---|
| வவுனியா | - | 2.30 | - |
| கண்டி | 6.30 | - | - |
| கொழும்பு | - | 1.00 | - |
| நுவரெலியா | 10.00 | - | இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| யாழ்ப்பாணம் | 11.45 | - | 2 மணித்தியாலம் |

12. புகையிரதங்கள் புறப்படவுள்ள இடங்களை ஒழுங்கு முறையில் தருக?
(01).கண்டி,நுவரெலியா,யாழ்ப்பாணம்,கொழும்பு (02).கண்டி,கொழும்பு,யாழ்ப்பாணம்,வவுனியா
(03).கண்டி,யாழ்ப்பாணம்,கொழும்பு,வவுனியா (04).கண்டி,நுவரெலியா,கொழும்பு,வவுனியா

13. ஒரு வகுப்பிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்ததினங்கள் கீழே காணப்படுகின்றன
லதா - 1998.01.24 சுதா - 1997.12.31
ராதா - 1998.11.20 சீதா - 1997.11.19
இதற்கேற்ப சரியான கூற்று யாது?
(01).சுதா லதாவிலும் இளையவள்
(02).சீதா ராதாவிலும் மூத்தவள்
(03).லதா ராதாவிலும் இளையவள்
(04).சுதா சீதாவிலும் மூத்தவள்



(04) பின்வரும் தகவல்களைக் கொண்டு 14, 15ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

| 1kg சவ்வரிசி + 500g சீனி | 1kg சவ்வரிசி + 250g சேமியா | 250g சேமியா + 500g சீனி |
|---|---|---|
| ரூபாய் 380 | ரூபாய் 270 | ரூபாய் 250 |

14. 750g சேமியா + 500g சீனி இன் விலை யாது?
(01).290 (02).450 (03).390 (04).580

15. 3kg சவ்வரிசி + 1kg சேமியா + 750சீனி இன் விலை யாது?
(01).1150 (02).1240 (03).1140 (04).1510

(05) 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 16, 17 ஆகிய வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

16. 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே
(01).4,5 (02).5,4 (03).4,4 (04).5,5

17. 2010ஆம் ஆண்டில் உள்ள வெள்ளிக்கிழமைகள் எத்தனை?
(01).53 (02).49 (03).50 (04).52

(06) 2010ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்கு உரியதாகும். இதற்கேற்ப 18, 19 ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க


18. அடுத்த ஒலிம்பிக் நடைபெறும் ஆண்டு
(01).21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தம் (02).21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம்
(03).20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம் (04).20ஆம் 21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தம்

19. 19ஆம் 20ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தத்திற்கு உரிய ஆண்டு எது.
(01).2045 (02).2055 (03).2145 (04).2155

20. ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட இருபது பேர்களிடையே பதினைந்து பேர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும், பத்துப்பேர் குளிர்பானம் அருந்திக் கொண்டும். இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டோ, குளிர்பானத்தை அருந்திக்கொண்டோ இருக்கின்றனர். சிலர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்திக்கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்தி கொண்டும் இருப்போர் எத்தனை பேர்?
(01).7 (02).5 (03)3 (04).2

(07) பின்வரும் உருவைப் பயன்படுத்தி 21,22ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க

இவ்வுருவில் இரு நகரங்களில் உள்ள இரு பாதைகளின் படங்கள் காணப்படுகின்றன. இல 1 சந்தை, 2 வங்கி, 3 பூங்கா, 4 மிருகக்காட்சிசாலை என்பவற்றைக் குறிக்கின்றன




21. நிலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே எவ்விடத்திற்குச் செல்வதற்குக் குறைந்த தடவைகள் வலப்பக்கம் திரும்ப வேண்டும்?
(1).சந்தை (2).பூங்கா
(3).வங்கி (4).மிருகக்காட்சிசாலை

22. கலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே சென்றால், எவ்விடத்திற்குச் செல்வதற்குக் கூடிய தடவை இடப்பக்கம் திரும்ப வேண்டும்?
(1).சந்தை (2).பூங்கா
(3).வங்கி (4).மிருகக்காட்சிசாலை

# மோடியின் யாழ்.உலா நிகழ்வின் நிழல் பதிவுகள்

























படங்கள் ஆர். இராஜகுமார்.

# ஏழு ஏவுகணைகளை சோதித்தது வடகொரியா

## கொரிய தீபகற்பத்தில் பதற்றம்



(பியாங்யாங்)


தென்கொரியா-அமெரிக்கா கூட்டு போர் பயிற்சிக்கு எதிராக, வடகொரியா அதிரடியாக 7 ஏவுகணைகளை அடுத்தடுத்து சோதித்துள்ளது. தென்கொரியாவும், அமெரிக்காவும் ஆண்டுதோறும் கொரிய தீபகற்ப பகுதியில் வழக்கமாக கூட்டு போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. வடகொரியா, இதனை எதிர்த்து வந்த நிலையில், இந்த ஆண்டில் தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு போர் பயிற்சியில் ஈடுபடாமல் இருந்தால், அணு ஆயுத சோதனைகளை நிறுத்திவைப்பதாக வடகொரியா அறிவித்தது.

ஆனால் அதை தென் கொரியாவும், அமெரிக்காவும் ஏற்றுக் கொள்ளாமல் வழக்கம்போல போர் பயிற்சி நடாத்தப்போவதாக அறிவித்தன. இந்த ஆண்டு கூட்டு போர் பயிற்சி தொடங்கிய நாளிலேயே வடகொரியா 'ஸ்கட்-சி' வகை ஏவுகணைகள் இரண்டை அடுத்தடுத்து சோதித்து தென்கொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அதிர்ச்சி அளிதுள்ளது.

கூட்டு போர் பயிற்சி முடியும் நிலையில், வடகொரியா தனது எதிர்ப்பை மீண்டும் தெரிவிக்கும் வகையில், தெற்கு ஹாம்க்யாங் மாகாணத்தில் சான்டாக் என்ற இடத்தில் கிழக்கு கடல் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் 7 மணிக்குள் அடுத்தடுத்து 7 ஏவுகணைகளை பரிசோதித்தது. இந்த ஏவுகணைகள் சோதனை அனைத்தும் வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் அன்னின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இவை அனைத்தும் எஸ்ஏ-2, எஸ்ஏ-3 மற்றும் எஸ்ஏ-5 வகையை சேர்ந்தவை என்றும் கூறப்படுகிறது. இந்த ஆண்டில் இது வடகொரியா நடாத்தியுள்ள 5ஆவது ஏவுகணை சோதனை ஆகும். இந்த ஏவுகணைகள் சோதனையால், கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

## தன்னை உதைத்தவரை பழிவாங்கியது நாய்





(சாங்க்கிங்)

சீனாவில் உள்ள சாங்க்கிங் பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவர் காரில் வெளியே சென்று விட்டு தனது வீட்டிற்கு திரும்பினார். அப்போது தனது காரை நிறுத்தும் செய்யும் பகுதியில் நாய் ஒன்று படுத்திருப்பதை கண்டார்.இதனால் கடுப்பான அவர் காரிலிருந்து இறங்கி நாயை எட்டி உதைத்தார். அடி வாங்கிய நாய் ஓட்டம் பிடித்தது. பின்னர் காரை அங்கு நிறுத்தி விட்டு அந்த நபர் வீட்டிற்குள் சென்று விட்டார். எட்டி உதைத்தவுடன் வேகமாக ஓடிய அந்த நாய் தனது சக நண்பர்களை, தான் உதை வாங்கிய இடத்திற்கு கூட்டி வந்தது.

4இற்கும் மேற்பட்ட நாய்கள் கார் நிறுத்திய பகுதிக்கு வந்து எட்டி உதைத்த நபரை பழி வாங்க நினைத்தது, ஆனால் கார் மட்டும் தான் இருந்தது. எட்டி உதைத்த நபரை காணோம். எனினும் ஆத்திரம் குறையாத நாய்கள் அனைத்தும் காரை ரவுண்டு கட்டி துவம்சம் செய்தன. காரின் வைப்பரையும் வாயால் கடித்து துப்பின. இக்காட்சிகளை படம் பிடித்த பக்கத்து வீட்டுக்காரர் அக காட்சிகளை காரை ஓட்டி வந்தவரிடம் காண்பித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு 13 வருடங்கள் சிறைத்தண்டனை

(மாலைதீவு)


மாலைத்தீவின் முன்னாள் அதிபரும் தற்போதைய எதிர்கட்சித் தலைவருமான முகமது நீஷித் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டது நிரூபணமாகியுள்ளதாக கூறி, அவருக்கு 13 வருட சிறை தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மாலைதீவின் முன்னாள் அதிபர் முகமது நீஷித் (வயது 47). இவர் தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் ஆவார்.இவர் கடந்த 2012 பெப்ரவரி மாதம் அதிபர் பதவியில் இருந்தபோது, அந்த நாட்டின் குற்றவியல் நீதிபதி அப்துல்லா முகமதுவை கைது செய்ய உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து முகமது நஷித்துக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றன. இதன் விளைவாக அவர் பதவி விலக நேர்ந்தது. 2013-ம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.



நீதிபதியை கைது செய்ய உத்தரவிட்டது தொடர்பாக முகமது நீஷிதை தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் மாலைதீவு பொலிசார் கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி கைது செய்தனர். அதன் பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த நிலையில், மேற்கண்ட வழக்குத் தொடர்பாக நேற்று முன்தினம் நள்ளிரவு மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியது. இதில், முகம்மது நீஷத் குற்றச்செயல்களில ஈடுபட்டது. அரசு தரப்பு மூலம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறி 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து தலைநகர் மலேவுக்கு அருகில் உள்ள தூனிதூ சிறைசாலையில் முகம்மது நீஷித் அடைக்கப்பட்டுள்ளார்.

## இரண்டாம் உலகப் போரில் மாயமான கப்பல் கண்டுபிடிப்பு



(டோக்கியோ)

இரண்டாம் உலகப்போரின் போது காணாமற் போன ஜப்பான் கப்பலொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது, ஜப்பான் 'முஷி' என்ற உலகிலேயே மிகப் பெரிய போர் கப்பலை பயன்படுத்தி வந்தது. இந்த நிலையில் 1944 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி குறித்த கப்பல் பிலிப்பைன்ஸ் நாடு அருகே சென்று கொண்டிருந்தது.

இந்த நிலையில், அமெரிக்க விமான படையினர் இந்தக் கப்பல் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் கப்பல் மூழ்கியதுடன், அதில் இருந்த ஆயிரம் வீரர்கள் உயிரிழந்தனர்.அந்த கப்பல் எந்த இடத்தில் மூழ்கியது என்பது கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்தது.

அமெரிக்காவில் புதைபொருள் ஆய்வு நிறுவனம் ஒன்று இந்த கப்பலை கண்டுபிடிக்க தானியங்கி வாகனங்கள் மூலம் பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் மூலம் கப்பல் கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## டில்லியில் நல்லாட்சி செய்து மாற்றத்தை ஏற்படுத்துவேன்

### கெஜ்ரிவால் தெரிவிப்பு



தேர்தல் வெற்றியை மட்டும் குறிவைக்கும் நெப்போலியன் இல்லை நான். டில்லியில் நல்லாட்சி அளித்து, மாற்றத்தை கொண்டு வருவதே எனது நோக்கம் என கட்சியினருக்கு அனுப்பி உள்ள செய்தியில் டில்லி முதல் வரும், ஆம்ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.


பெங்களூருக்கு சிகிச் சைக்காக சென்றுள்ள அரவிந்த் கெஜ்ரிவால், ஆம்ஆத்மி கட்சிக்குள் நிலவி வரும் குழப்பான சூழல் குறித்து கட்சியினருக்கு தகவல் ஒன்றை அனுப்பி உள்ளார். அதில், தேர்தல் வெற்றிகளை மட்டும் குறிக்கோளாக கொண்டிருக்க நான் நெப்போலியன் இல்லை. டில்லியில் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும், நல்லாட்சி வழங்கி அதன் மூலம் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதே எனது நோக்கம். டில்லியை ஒரு முன்மாதிரி நகரமாக மாற்ற நினைக்கிறோம். நாட்டில் மட்டும் அல்ல உலகிலேயே புதிய வடிவிலான அரசை டில்லியில் நிச்சயம் கொண்டு வருவேன் என்றார்.

## லண்டனில் காந்தி சிலை திறந்து வைத்தார் ஜெட்லி

(லண்டன்)

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி அந்நாட்டின் நிதியமைச்சர் ஜோர்ஜ் ஆஸ்போனை சந்தித்துப் பேசினார். நேற்று பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் இந்திய தொழில் அதிபர்களை சந்தித்தார். தொடர்ந்து யூனியன் பாங்க் ஆப் இந்தியா வங்கிக்கிளையையும் திறந்து வைத்தார். மேலும் தென்னாபிரிக்காவிலிருந்து காந்தி இந்தியா திரும்பிய100ஆவது ஆண்டை நினைவு கூறும் வகையில் லண்டன் பார்லி., வளாகத்தில் அமைக்கப்பட்ட காந்தியின் வெண்கல சிலையை திறந்து வைத்தார் இவ்விழாவில் இந்தி திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் கலந்துகொண்டார்.

## மூளையின் வலியை உணரும் பகுதி விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு



(லண்டன்)

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் மனித மூளையின் வலியை உணரச் செய்யும் பகுதியை கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் தாங்க முடியாத வலியால் சிரமப்படும் நோயாளிகளின் வலியை மறக்கடிக்க செய்ய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், தங்கள் வலியை வெளிப்படுத்த முடியாத நிலையில் உள்ள கோமா நோயாளிகள் பேரன்றோரின் வலியையும் இதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

இந்த ஆராய்ச்சியின் தலைமை விஞ்ஞானி ஐரின் டிரேஸி கூறும்போது "வலி, மனித உணர்ச்சிகளில் மிகவும் சிக்கலானது. இது மனிதர்களின் மற்ற செயுறபாடுகளையும் பாதிக்கிறது. குறிபபாக கவனிப்பு திறன், பயம், உணர்ச்சி வசப்படுதல் போன்றவற்றில் வலி ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே இது முக்கிய கண்டுபிடிப்பு" என்று தெரிவித்தார்.

# ஆஸி மீது ரணில் சீற்றம்

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மௌனம் குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிருப்தி வெளியிட்டுள்ளார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினருடன் அவுஸ்திரேலிய பிரதமர் டொனி அபொட்டிற்கு உள்ள நெருக்கம் குறித்து இலங்கை மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

'தி அவுஸ்ரேலியன்' ஊடகத்திற்கு அளித்துள்ள விசேட பேட்டியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுகளை தடுத்து நிறுத்துவதில் ராஜபக்ஷவினரின் உதவியை பெறுவதற்காக அவர்களின் மனித உரிமை மீறல்கள் குறித்து மௌனமாக இருப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்ததாக பிரதமர் குற்றம் சுமத்தியுள்ளார். முன்னைய அரசாங்கத்தை சேர்ந்தவர்களுக்கு ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் தொடர்பு இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு படகுகள் மூலமாக ஆட்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கையை ராஜபக்ஷவினருக்கு தொடர்புடையவர்களே மேற்கொண்டதாகவும் இலங்கையின் பாதுகாப்பு படையினர் அல்லது பொலிஸாரின் ஒத்துழைப்பின்றி இது சாத்தியமில்லை என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### பிரதமர்..

நிறைவேற்றப்பட உள்ளது.

இந்தப் பிணைப்பத்திர விநியோகத்தின் ஊடாக பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக நியமிக்க ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சர் ஒருவரை பிரதமராக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு ஆளும் கட்சியின் இரண்டு அமைச்சர்கள் ஆதரவளித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### தேர்தல்..

தேர்தல் முறையில் மாற்றம் செய்யாது, உறுதியளிக்கப்பட்டது போல், 100 நாள் முடியும் ஏப்ரல் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஏனைய சில சிறிய கட்சிகளும் யோசனை முன்வைத்துள்ளன.

எனினும் அரசாங்கத்தை ஏற்படுத்த உதவியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்களும், ஜாதிக ஹெல உறுமய கட்சியை சேர்ந்தவர்களும் தேர்தல் முறையை மாற்றிய பின்னர் தேர்தலை நடத்தலாம் எனவும் அதற்கு 100 நாட்கள் போதவில்லை எனில் தேவையான காலத்தை எடுத்து கொண்டு அதனை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

அதேவேளை நிறைவேற்று சபையில் எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்படுவதால், சபையை நடத்திச் செல்வதில் தடையேற்பட்டுள்ளதாக அதன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

### யாழ்...

வேண்டும், காணாமல் போனவர்கள் தொடர்பில் தகுந்த பதிலளிக்க வேண்டும், யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை அவர்களுடைய சொந்த இடங்களிலும் பூர்வீக பிரதேசங்களிலும் குடியமர்த்த வேண்டும்,

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும், இழுவைப்படகுகளினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், போரின் போது கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளுட்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், இவற்றுக்கு தாங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வழங்கப்படும் இந்திய வீடமைப்பு நிதி போதுமானதல்ல. அதனை அதிகரிக்க வேண்டும், கடல் வளங்களை அழிக்கும் வலைகள் தடை செய்யப்பட வேண்டும், இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும், ஆகிய கோரிக்கைகள் அந்த மகஜரில் உள்ளடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட ஒத்துழைப்பு மீனவர் இயக்கம், யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம், யாழ். மவட்ட பூந்தளிர் பெண்கள் அமைப்பு, மயிலிட்டித்துறை கடல் தொழிலாளர் சங்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றம் மற்றும் புனர் வாழ்வுக்குழு, வலி. வடக்கு பிரஜைகள் குழு ஆகியன இக்கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தின. (25)

### கிளி...

செயலராக கடமையாற்றிய இவர் மிக அண்மையில் இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய செல்லமுத்து சிறிநிவாசன் சென்ற பெப்ருவரி 23 ஆம் திகதி ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமனம் பெற்றுள்ளார். (90)

### ஏப்ரல்..

கூறியுள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றம் செய்வது தொடர்பாக நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறையில் திருத்தம் ஏற்படும் வரை காத்திருக்க முடியாது எனவும் முதலில் தேர்தலை நடத்தி விட்டு, அதன் பின்னர் தேர்தல் முறையை நாட்டுக்கு அறிமுகம் செய்ய முடியும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

### மோடியுடன்...

பேச்சுக்கள் இடம் பெற்ற போது இந்திய தேசியக்கொடியும் இலங்கைத்தேசியக்கொடியும் அங்கே பின்னணியில் வைக்கப்பட்டிருந்தது. மோடி இந்திய தேசியக்கொடிக்கு அருகிலும், முதல்வா விக்கி இலங்கைத்தேசியக்கொடிக்கு அருகிலும் அமர்ந்து இருந்தது பேச்சுக்களில் ஈடுபட்டமையைக்காணக் கூடியதாக இருந்தது. அங்கே வடக்கு மாகாண கொடி எதுவும் வைக்கபட்டிருக்கவில்லை.

இலங்கையின் சுதந்திர தினத்தையும் தேசியக்கொடியையும் கடந்தகாலத்தில் புறக்கணித்த முதல்வர் விக்னேஸ்வரன் நேற்றைய சந்திப்பில் தேசியக்கொடியின் நிழலில் அமர்த்திருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

### இந்திய...

இந்தியாவினால் கட்டிக் கொடுக்கப்படும் 45 ஆயிரம் வீடுகளில் 20 ஆயிரம் வீடுகள் நிறைவடைந்துள்ள நிலையில் மிகுதியான வீடுகள் அனைத்தும் விரைவில் அமைத்துக்கொடுக்கப்படும் எனவும் தொடர்ந்தும் இந்திய உதவித் திட்டங்கள் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்று இந்திய வீட்டுத்திட்ட வீடுகளை இளவாலை வடமேற்கில் வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:


இந்த வீட்டுத்திட்டத்திற்கான யோசனை குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்ட போதும் சுனாமி தாக்கத்தின் போதும் உருவாகியது. இதன்பயனாக தற்போது 27 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைகின்றன. இதில் உள்ள 27 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் சிறுவர்கள் சீரான வாழ்வைப் பெறவுள்ளமையே மகிழ்வைத்தருகின்றது.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் சீரான அபிவிருத்தி நோக்கிய வளர்ச்சி ஏற்படவேண்டும் இன்று இந்த வீடுவழங்கும் போது அவர்கள் மகிழ்வடைந்துள்ளதை அவதத்தேன் அத்தோடு இந்த வீட்டில் வாழப்போகும் சிறுயிடம் நீ என்னவாக எதிர்காலத்தில் வருவாய் என கேட்டதற்கு ஆசிரியையாக வருவேன் என தெரிவித்தார். இது பெருமகிழ்வைத் தருகிறது. ஏனெனில் ஆசிரியர் என்பவர் ஒரு சமுதாயத்தை உருவாக்குபவர் எனவே இந்த சிறார்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் இந்தியா கட்டிக் கொடுக்கும் வீட்டின் மூலம் ஒருசமுதாயமே உருவாகும் என்றால் அது பெருமகிழ்வாகத் தான் இருக்கும் இந்திய அரசின் இந்த வீட்டுத்திட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் மத்திய, ஊவாமாகாணங்களிலும் அமைக்கப்படும்.

நான் இலங்கைக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்தேன் இந்த நிகழ்வே எனது மனதை நெகிழ வைத்ததாக அமைகின்றது. யாழ். மக்களின் வாழ்வில் அபிவிருத்தி பெற நாம் துணைநிற்போம் அதற்காக அனைத்து மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது யாழ். அரச அதிபரினால் மலர் மாலை அணியப்பட்டு இந்திய பிரதமர் வரவேற்கப்பட்டதுடன் வீட்டிற்கான பாலையும் பொங்க வைத்தார். மோடி தொடர்ந்து அந்த வீட்டை சுற்றிபார்த்ததுடன் பயனாளிகளுடன் கலந்துரையாடியதுடன் அவர்களுக்கான வீட்டு சான்றிதழையும் வழங்கிவைத்தார்.

இதன்போது பெருமளவான மக்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ)



கீரிமலை நகுலேஸ்வரத்தில் வழிபாடுகளில் மோடி ஈடுபட்ட போது...

## மனு கொடுத்தார் மன்னார் ஆயர்

மன்னாருக்கு விஜயம் செய்த இந்தியப்பிரதமர் மோடியிடம் மன்னார் ஆயர், கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை மனு ஒன்றை கையளித்தார்.

2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி, இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்த மகஜரின் பிரதியே மோடியிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், வடபகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட பொது மக்களின் நிலம் உடமை, வடபகுதியின் இராணுவப்பிரசன்னம், போன்ற மிக முக்கியமான பிரச்சைனைகளுக்குத்தீர்வு காணுமாறு அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்மகஜர் தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆயர் தெரிவித்தார்.

## உண்ணாநோண்பு இருந்தவர் மருத்துவமனையில் அனுமதி

இந்தியப் பிரதமர் மோடியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக பத்து அம்ச கோரிக்கையை முன்வைத்து கடந்த இரு நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்த, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்க தலைவர் சி.வி.சகாதேவன், நேற்று சனிக்கிழமை மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் மோடியின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை கோரிக்கையாக முன்வைத்து போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்க தலைவர் சி.வி.சகாதேவனால் யாழ். பொதுநூலகத்துக்கு முன்பாக கடந்த இரு நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தார்.

10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த வியாழக் கிழமை(12) முதல் சகாதேவனால் உண்ணவிரதப் போராட்டம் முன்வைக்கப்பட்டது.

### மன்னாரில்...

ளிக்கப்பட்டது. இந்த மனுவை மன்னார் ஆயர் இராயப்பு யோசப், வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோர் கையளித்தனர். இந்நிகழ்வில் மத்திய அரசின் போக்குரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, அதன் பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியூதீன், மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் வை.கே.சின்கா, யாழ். இந்திய துணைதூதுவர் தட்சணாமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், குனைஸ் பாரூக், முத்தலிபு பாபா பாரூக், வட மாகாண கடற்றொழில் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசபிரிய, மாகாண சபை உறுப்பினர்களான பிறிமுஸ் சிராய்வா, றிப்கான் பதியுதீன், அயூப் அஸ்மின் மற்றும் புகையிரத திணைக்கள உயர் அதிகாரிகள் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நிலத்தடி...

அவற்றை ஆய்வு செய்த பகுப்பாய்வு திணைக்களம் 30 கிணறுகளிலும் உள்ள நீரில் எண்ணெய். கிறிஸ் ஆகியன கலந்திருப்பதாக உறுதி செய்தது.

தெல்லிப்பழையில் இவற்றின் செறிவு அதிகமாக இருப்பதாகவும் தெல்லிப்பழைக்கு அப்பால் உள்ள கிணறுகளில் செறிவு குறைவாக இருப்பதாக ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இதனால் சுன்னாகம் பகுதியில் இருந்துதான் எண்ணெய் கசிவு வெளியேறியதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

எண்ணெய்க் கசிவு உள்ள கிணறுகளின் பாவனையை தடை செய்யாதது மிகவும் வேதனையானது. சுமார் 1 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

அதேவேளை வலிகாமம் மேற்கு பகுதிகளிலும் நிலத்தடி நீரில் கழிவு எண்ணை கலப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கொப்புலம் மேற்கு மற்றும் தொல்புரம் கிழக்கு ஆகிய பகுதிகளில் சில கிணறுகளில் எண்ணைக்கழிவு கலந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் பாணாவெட்டிப்பகுதியில் உள்ள திரு.திருச்செல்வம் என்பவரது வீட்டுக்கிணற்றில் எண்ணெய்க்கசிவு கலந்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. அதேபோல தொல்புரம் கிழக்கு பகுதியில் உள்ள திரு.நற்தகுமார் என்பவரது வீட்டு கிணற்றிலும் எண்ணைப்படலம் மிதப்பதாக அப்பகுதி கிராம அலுவலர் திரு ச.வைத்தியநாதன் பிரதேசசெயலகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

# மோடியுடன் ஹக்கீம் கொழும்பில் சந்திப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான கட்சியின் உயர் மட்டக்குழுவினர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று இரவு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சந்தித்து அதிகாரப் பகிர்வு, வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கம் என்பன உட்பட முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

அமைச்சர் ஹக்கீமுடன் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான எம்.ரீ.ஹஸனலி, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், கட்சியின் வெளிவிவகாரப் பணிப்பாளர் ஏ.எம்.பாயிஸ் ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

கிழக்கு மாகாணத்தில் விவசாய, கால்நடை அபிவிருத்தி, கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவித்தல், தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் பீடங்களை நிறுவுவதற்கும கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் உதவி வழங்கல் போன்றவற்றுக்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைக்குமென்று பிரதமர் மோடி தூதுக்குழுவினரின் வேண்டுகோள் சிலவற்றுக்கு பதிலளிக்கும் போது குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் முயற்சியினால் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது குறித்து இந்தியப் பிரமதர் மோடி தம்மைச் சந்தித்த தூதுக்குழுவினரிடம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்


சந்திப்பின் இறுதியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம், தமது குழுவினரின் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது எனக் கூறினார்.

# மகிந்தவுடன் மோடி நேற்று மாலை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசினார்.

இருவருக்குமிடையிலான இந்தச் சந்திப்பு நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்தியத்தூதரக இல்லத்தில் இடம்பெற்றது.



இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 40இற்கும் மேற்பட்ட உத்தியோகபூர்வ சந்திப்புகளின் இறுதிச் சந்திப்பாக இது அமைந்தது என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஷெய்யத் அக்பருதீன தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கை நிதியச்சட்டம் மறுசீரமைக்க குழு நியமனம்

ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நான்கு பேர் கொண்ட குழு ஒன்றே நியமிக்கப்பட்டுள்ளதாக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மஹிந்த மடிஹேவா தெரிவித்துள்ளார்.


தற்போதைய சூழ்நிலைக்கேற்ப, குறித்த குழுவினரின் ஆலோசனைக்கு அமைய ஊழியர நம்பிக்கை நிதியச் சட்டம் மறுசீரமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் ஆலோசனைகளும் சட்ட மறுசீரமைப்பின் போது கவனத்திற் கொள்ளப்படும் எனவும் மஹிந்த மடிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

## நூறு நாள் செயற்றிட்டம்; அபிப்பிராயம் தெரிவிக்க வாய்ப்பு

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் சகல தகவல்களையும் பொது மக்கள் அறிந்துகொள்வதற்கு புதிய மின்னஞ்சல் முகவரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் 100 நாட்கள் வரையிலான வேலைதிட்டத்தின் அட்டவணை மற்றும் சகல தகவல்களும் திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு துறை திணைக்களத்தின் www.pmm.gov.ilk என்ற மின்னஞ்சல் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என பிரதம அமைச்சரின் அலுவலகம் அறிவித்துள்ளது. 100 நாள் வேலைதிட்டம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் கருத்து, பணிப்பாளர் நாயகம், திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு திணைக்களம், இலங்கை மத்திய வங்கி கட்டடம். கொழும்பு 01 என்ற விலாசத்தில் அல்லது 100 daya feedback@ pmm.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியிலும் கருத்துக்களை வெளியிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



தலைமன்னாருக்கான ரயில் சேவையை நேற்று இந்தியப் பிரதமர் பச்சைக்கொடி அசைத்து ஆரம்பித்து வைத்த போது.....

# பாதுகாப்பு உச்சம் முதல்வரும் தப்பவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ் பளிஹக்கார, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரின் வாகனங்கள் கடும் சோதனைக்கு பின்னரே யாழ். பொது நூலகத்துக்குள் அனுமதிக்கப்பட்டன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு யாழ். பொதுநூலகத்தில் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டதையடுத்து, இந்திய நிதியுதவியில் முற்றவெளியில் கலாசார மண்டபம் கட்டுவதற்கான நினைவுக்கல் திரை நீக்கமும் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பொதுநூலகத்துக்கு வருகை தந்த வடமாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரின் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே பொதுநூலகத்துக்குள் அனுமதிக்கப்பட்டன.



இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு பிரிவினரே வாகனங்களை சோதனை செய்தனர். இதே வேளை, அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

# மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எப்போது?

## ஜனாதிபதியை சந்திக்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

பொதுமக்களின் பணத்தை சூறையாடிய அரசியல்வாதிகளின் ஆவணங்களுடன், எதிர் வரும் திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்திப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகி வருகின்றது.

பொலன்னறுவையில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனநாயக சுதந்திரம், ஊழல் மோசடிகளுக்கான தண்டனையாகவே அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. அதிகாரத்தைக் கைப்பற்றி, இரண்டு நாட்களில் பசில் நாட்டை விட்டு வெளியேறினார். அரசியல்வாதிகளின் குழு வொன்றே இன்று அரசாங்கமாக இருக்கின்றது, என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழல்கள் தொடர்பில் தாம் முன்வைத்த முறைப்பாடுகள் குறித்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆதாரத்துடன் அனைத்து ஆவணங்களையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# அந்த அரபுப் பிரஜை யார்? மோடியின் பாதுகாப்பில் தவறு

(கொழும்பு)

இலங்கைக்கு நேற்று வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பாரிய தவறு நேர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹொட்டலில் இந்த தவறு ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர், சற்று ஓய்வெடுப்பதற்காக ஹொட்டலுக்கு சென்று நடந்து சென்று கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத அரபு பிரஜை ஒருவர், பிரதமரை நோக்கி வந்து தழுவிக்கொண்டுள்ளார்.

மிக முக்கிய பிரமுகர் ஒருவரை முன்பின் தெரியாத ஒருவர் வந்து தழுவிக் கொள்வது பாரிய பாதுகாப்பு தவறாகும்.

இதனையடுத்து சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் உடனடியாக மாற்றம் செய்யப்பட்டதுடன் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அத்துடன் ஏற்பாடுகளில் நிகழ்ந்த தவறு குறித்தும் விசேட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.